# வாடகை தேவதை

## ராஜேஷ்குமார்

டென்னீஸ் பந்து ஆட்டத்துக்கு டென்னீஸ் என்று பெயர் வரக் காரணம் என்ன? எகிப்தில் உள்ள ஒரு நகரத்துக்குப் பெயர் டென்னீஸ். அந்த நகரத்தில்தான் டென்னீஸ் பந்துகளை செய்யக்கூடிய ரப்பர் தன்மையோடு கூடிய நூலிழைகள் தயாரிக்கப்பட்டன. எனவே அந்த ஆட்டத்துக்கு டென்னீஸ்* என்ற பெயர் ஏற்பட்டது.



### 1

''வணக்கம் நேயர்களே! இது உங்கள் 'ஸ்கை' டி.வி.

தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்பாய் உட்கார்ந்து நிகழ்ச்சியைப் பார்த்து ரசிக்க



காத்துக் கொண்டிருக்கும் லட்சோப லட்சம் நேயர்களுக்கு 'ஸ்கை' டி.வி.யின் புத்தாண்டு வாழ்த்துக்கள். அடுத்த சில விநாடிகளில் டென்னீஸ் வீராங்கனை குந்தவை நேரடி ஒளிபரப்பில் தோன்றி, நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லப் போகிறார். அவரைத் தொடர்பு கொண்டு கேள்வி கேட்க விரும்புபவர்கள் இந்த எண்களுக்கு டயல் செய்யுங்கள்...!''

டி.வி.காம்பியர் பெண்ணின் முகம் சில விநாடிகள் காணாமல் போக, திரையில் டெலிபோன் எண்கள் தெரிந்தன.

டி.வி.க்கு முன்பாய் உட்கார்ந்து தலையணையை அணைத்தபடி சோபாவுக்கு சாய்ந்திருந்த நீலவண்ணக் கண்ணன், சட்டென்று தன் சட்டைப் பையில் இருந்த பால்பாயிண்ட் பேனாவை எடுத்து திரையில் தெரிந்த டெலிபோன் எண்களை இடது உள்ளங்கையில் குறித்துக் கொண்டான்.

பத்தே விநாடிகளில் காம்பியர் பெண்ணின் முகம் மறுபடியும் புன்னகையோடு திரையில் தோன்றியது.

''நேயர்களே...! டென்னீஸ் வீராங்கனை குந்தவையைப் பற்றி உங்களுக்கெல்லாம் நான் சொல்ல வேண்டியது இல்லை. இன்றைக்கு இந்தியாவில் உள்ள எந்த நாளிதழைப் புரட்டினாலும் சரி, வார இதழைப் புரட்டினாலும் சரி, அதில் குந்தவையின்

முகம்தான் இருக்கும். தமிழ்நாட்டில் உள்ள கிராமம் ஒன்றில் சாதாரண குடும்பத்தில் பிறந்த குந்தவை இன்றைக்கு உலக அளவில் பேசப்படும் டென்னீஸ் வீராங்கனை. இந்த் வருட தீபாவளியை குந்தவையோடு சேர்ந்து நீங்கள் கொண்டாட வேண்டும் என்பதற்காகவே ஸ்கை டி.வி. இந்த நேரடி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. இனி நேயர்கள் தங்கள் கேள்விக்கணைகளைத் தொடுக்கலாம்...''

காம்பியர் பெண் பேசி முடித்ததும் காமிரா மெல்ல நகர்ந்து, குந்தவையை மையம் கொண்டது.

இருபது வயதே நிரம்பிய குந்தவைக்கு உண்மையிலேயே குங்குமப்பூ நிறம். அடர்த்தியான சுருள் முடியை உயரத் தூக்கிக் கொண்டை போட்டிருந்தாள். இயற்கையான புருவங்களுக்கு கீழே பெரிய கண்கள். பார்க்கும் பார்வையில் மின்சாரம். இரு காதுகளிலும் ஊஞ்சலாடும் பொன் வளையங்கள்.

வரிசை பிறழாத பற்களைக் காட்டி, ''வணக்கம்'' சொன்னவள் பேச ஆரம்பித்தாள்.

''நான் இன்றைக்கு டென்னீஸ் விளையாட்டின் மூலம் பிரபலமாகியிருக்கிறேன் என்றால் அதற்கு உங்களைப் போன்ற அன்புள்ளம் கொண்டவர்களின் ஆதரவும், இறையருளும்தான் காரணம். நான்



இப்போதும் எல்லோரையும் போல் ஒரு சாதாரணப் பெண்தான். எனக்கு டென்னீஸ் விளையாடத் தெரிந்து இருக்கிறது என்கிற ஒரே ஒரு விஷயம்தான் எக்ஸ்ட்ரா. இப்போது நான் டென்னீஸ் விளையாட்டில் உலகத்தர வரிசையில் 59வது இடத்தில் இருக்கிறேன். இந்த எண்ணிக்கையை நான் குறைக்க வேண்டும். முதல் இடத்துக்கு வராவிட்டாலும் கூட டாப் 10இல் ஏதாவது ஒரு எண்ணைப் பிடிப்பதே என் லட்சியம். டி.வி.நேயர்கள் என்னிடம் பேசவும், கேள்விகளைக் கேட்கவும் ஆர்வமாய் இருப்பீர்கள். இப்பேது நீங்கள் கேள்விகளைக் கேட்கலாம்...''

உடனே டெலிபோன் கிணுகிணுத்தது. ஒரு பெண் குரல் கேட்டது. ''ஹலோ குந்தவை...''

''யாரு...?''

''நான் காமினி... திருவண்ணாமலையிலிருந்து பேசறேன். உங்களுக்கு என்னுடைய புத்தாண்டு வாழ்த்துக்கள்...''

''உங்களுக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் இன்னிக்கு முதல் காலரான நீங்க என்கிட்டே என்ன கேள்வியை கேட்கப் போறீங்க...?''

''இந்த டென்னீஸ் விளையாட்டில் உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது...?''

''நான் ஸ்டெபிகிராபியின் ரசிகை. டி.வி.யில் அவருடைய ஆட்டத்தைப்

பார்க்கும் போதெல்லாம் இவரைப் போல் நாம் ஏன் டென்னிஸில் புகழ் பெறக்கூடாது என்று நினைப்பேன். பள்ளியிலும், கல்லூரியிலும் கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு டென்னீஸ் விளையாடினேன். நான் நன்றாக விளையாடு வதைப் பார்த்து என்னுடைய பி.டி.மாஸ்டர் எனக்கு தனிப்பட்ட முறையில் கோச்சிங் கொடுத்து மாவட்ட அளவிலான டென்னீஸ் மேட்சுகளில் ஆட வைத்தார். அதில் பெற்ற வெற்றிகளைத் தொடர்ந்து மாநில அளவிலான மேட்சுகளில் ஆடி அதில் சாதனைகளை நிகழ்த்தியபின் விம்பிள்டனில் விளையாட தங்கமான ஒரு வாய்ப்பு கிடைத்தது. முதல் ஆட்டத்திலேயே டென்னீஸ் தர வரிசையில் ஒன்பதாவது இடத்தில் இருந்த ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த 'நாடியா'வை தோற்கடித்து டி.வி. மூலமாகவும், ப்ரஸ் மீடியா மூலமாகவும் ஒரே ராத்திரியில் எல்லோர்க்கும் தெரிந்தவளாகிப் போனேன். விம்பிள்டனில் ப்ரீ க்வார்ட்டர் ஃபைனல் வரைக்கும் முன்னேறினேன். அடுத்து பிரெஞ்ச் ஓபன் போட்டியில் பங்கெடுத்துக் கொண்டு செமி ஃபைனல்ஸ் வரைக்கும் முன்னேறினேன். இதன் காரணமாக இப்போது டென்னீஸ் தர வரிசையில் நான் இப்போது 59வது இடத்தில் இருக்கிறேன்...''

அடுத்த காலர் ஒரு ஆண். சென்னை நங்கநல்லூரிலிருந்து பேசினார். ''இப்படி



யொரு புகழ் உங்களுக்கு கிடைக்கும் என்று நினைத்தீர்களா...?''

''டென்னிஸில் புகழ்பெற வேண்டும் என்று நினைத்தேன். அதற்காக உழைத்தேன். கடவுளின் அருளும் இருந்ததால் புகழ், பெயர் கிடைத்தது...''

டி.வி.யைப் பார்த்தபடியே – நீலவண்ணக் கண்ணன் குந்தவையிடம் பேச டெலிபோன் எண்களை தட்டிக் கொண்டிருந்தான். லைன் கிடைக்கவில்லை. மூன்றாவது காலர் மீண்டும் ஒரு பெண்.

''நீங்கள் பார்க்க ஒரு சினிமா நடிகை மாதிரி அழகாய் இருக்கிறீர்கள். சினிமாவில் நடிக்க வாய்ப்பு கிடைத்தால் நடிக்கும் எண்ணம் உண்டா...?''

''கிடையாவே கிடையாது! என்னுடைய எண்ணம் பணம் சம்பாதிப்பதில் இல்லை. இந்தியாவை டென்னீஸ் அரங்கில் உயர்ந்த ஒரு நிலைமைக்கு கொண்டு வர வேண்டும் என்பதில்தான்! சினிமாவில் நடிப்பதற்காக பணத்தைக் கொண்டு வந்து கொட்டிக் கொடுத்தாலும் சினிமாவில் நடிக்க ஒப்புக் கொள்ளமாட்டேன்...''

''எதனால் சினிமா வேண்டாம் என்று சொல்கிறீர்கள்?''

''மற்ற துறைகளைக் காட்டிலும் சினிமாத்துறையில் பொய்கள் அதிகம். பொய்களால் கிடைக்கும் புகழ் எனக்கு வேண்டியது இல்லை...''

நான்காவது காலர் ஒரு கல்லூரி மாணவி.

''இன்றைக்கு டென்னீஸ் என்ற வார்த்தையைக் கேட்டாலே இந்தியாவில் இருக்கிற எல்லோர்க்கும் உங்களுடைய ஞாபகம்தான் வருகிறது. இதற்காக நீங்கள் கர்வப்பட்டதுண்டா...?''

''எதற்காக கர்வம் வரவேண்டும்? கடவுள் எல்லோர்க்கும் ஒவ்வொரு விதமான திறமையைக் கொடுத்து இருக்கிறார். நான், எனது என்று கர்வம் படைத்தவர்கள் எவ்வளவு பெரிய சாதனையாளர்களாக இருந்தாலும் கடைசியில் அவர்கள் தோல்விகளைத்தான் சந்திக்க வேண்டியிருக்கும்...''

''உங்களுடைய அம்மா அப்பாவைப் பற்றி கொஞ்சம் சொல்ல முடியுமா...? அவர்கள் எப்படி டென்னீஸ் விளையாட்டில் உங்களுக்கு ஊக்கம் கொடுத்தார்கள்?''

''என்னுடைய அப்பா அனந்தநாராயணன் ஒரு சாதாரண மில் தொழிலாளி. அம்மா பெயர் புனிதா. ஆரம்ப பள்ளிக்கூடத்தில் ஆசிரியையாய் வேலை பார்த்தவங்க... அம்மாவுக்கும் அப்பாவுக்கும் டென்னீஸ் விளையாட்டைப் பத்தி அதிகம் தெரியாத தினால மொதல்ல 'இந்த பணக்கார விளையாட்டெல்லாம் நமக்கு எதுக்கு...? ஒழுங்கா டீச்சர் ட்ரெய்னிங் கோர்ஸை முடி; உள்ளூர் எம்.எல்.ஏ.வை வெச்சு வேலையை வாங்கிடலாம்'ன்னு சொல்லிட்டிருந்தாங்க.



அப்புறம் நான் மாவட்ட அளவில் பெற்ற வெற்றிகளைப் பார்த்ததும் அப்பாவும் அம்மாவும் மனசை மாத்திக்கிட்டாங்க. மாநில அளவில் நான் விளையாடும்போது எந்த ஒரு கம்பெனியுமே என்னோட செலவுகளுக்காக ஸ்பான்ஸர் பண்ண முன்வரலை. அந்தச் சமயத்தில் அப்பா கிராமத்தில் இருந்த எங்களுடைய ஒரே சொத்தான நிலத்தை வித்து செலவு பண்ணினாங்க...''

''நான் ஒரு கேள்வியைக் கேட்டா தப்பா நினைக்க மாட்டீங்களே...?''

''தாராளமா கேட்கலாம்...''

''டென்னிஸில் பேரும் புகழும் உங்களுக்கு வந்த பிறகு நிறைய விளம்பரப் படங்கள்ல நடிக்கறீங்க... அதுக்காக உங்களுக்கு கோடிக்கணக்கில் பணம் தரப் படுதுன்னு பேப்பர்ல ந்யூஸ் போடறாங்க. அது உண்மையா?''

''உண்மைதான்...! பெரிய பெரிய வர்த்தக நிறுவனங்கள் தங்களோட பொருள்களை மார்க்கெட் பண்றதுக்காக கிரிக்கெட் வீரர்களின் புகழையும் பெயரையும் பயன்படுத்திக்கிற மாதிரி டென்னிஸில் நான் அடைஞ்சிருக்கிற பாப்புலாரிட்டியை சில வர்த்தக நிறுவனங்கள் பயன்படுத்திக்கறாங்க. அதுக்காக பணமும் தர்றாங்க... இதுல எந்தவிதமான ஒளிவு மறைவு வேலைகளும் இல்லை...''

நீலவண்ணக் கண்ணன் விடாமுயற்சியோடு செல்போன் எண்களைத் தட்டிக் கொண்டிருக்க, ஏழெட்டு காலர்களுக்குப் பின் அவனுக்கு குந்தவையோடு பேச நேரடித் தொடர்பு கிடைத்தது.

''வணக்கம் குந்தவை...''

''வணக்கம்! உங்க பேரு...?''

''நீலவண்ணக் கண்ணன்...''

''எங்கிருந்து பேசறீங்க...?''

''மதுரைக்குப் பக்கத்தில் இருக்கிற சோழவந்தான்...''

''சரி... உங்க கேள்வி என்ன?''

''மேடம்...! எனக்கு பிடிக்காத ரெண்டு விளையாட்டுக்கள் இந்த கிரிக்கெட்டும் டென்னிஸூம்தான்...! ஜனங்களை யெல்லாம் முட்டாளாக்கிட்டு இந்த இந்தியாவில் சீக்கிரமாக ஒருத்தன் பணக்காரன் ஆகனும்ன்னா ஒன்னு அவன் அரசியல்வாதியாய் இருக்கனும்; இல்லேன்னா கிரிக்கெட் வீரராய் இருக்கனும்; இல்லேன்னா டென்னீஸ் ப்ளேயராய் இருக்கனும். நான் சொல்றது சரியா... தப்பா...?''

''உங்க கேள்விக்கு பதில் சொல்றதுக்கு முந்தி நான் ஒரு கேள்வியை உங்க கிட்டே கேக்கலாமா...?''

''ஆஹா...! தாராளமாய்...''

''நீங்க என்ன வேலை பார்க்கறீங்க...''



''நான் எந்த வேலையிலும் இல்லை. படிச்சுட்டு வேலை தேடிக்கிட்டு இருக்கேன்...''

''நான் நினைச்சது சரியா போச்சு...''

''நீங்க என்ன நினைச்சீங்க...?''

''படிச்சுட்டு வேலை இல்லாமே இருக்கும்போதுதான் நல்லாயிருக்கிற மத்தவங்களைப் பார்த்து இப்படியெல்லாம் பொறாமைப்படத் தோணும்...''

''எனக்கொன்னும் பொறாமையில்லீங்க! இந்த நாட்டோட இளைஞர்கள் இன்னிக்கு எப்படியிருக்காங்கன்னு பார்க்க வேற எங்கேயும் போக வேண்டாம். கிரிக்கெட் நடக்கிற ஒரு ஸ்டேடியத்துக்குப் போய்ப் பார்த்தா போதும்; அதே மாதிரி ஒரு டென்னீஸ் மேட்ச் நடக்கிற இடத்துக்குப் போய் பார்த்தா போதும். மணிக்கணக்கில் உட்கார்ந்து மேட்ச் பார்க்கறாங்க. எவ்வளவு மனித சக்தி வீணாகுது தெரியுமா...?''

''இதோ பாருங்க நீலவண்ணக் கண்ணன்...! நம்ம வாழ்க்கையில் விளையாட்டும் ஒரு அங்கம். ஒலிம்பிக்கில் ஒரு தங்கம் ஜெயிக்கிறதுக்காக ஒவ்வொரு நாடும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு பண்ணிட்டு இருக்காங்க. அந்த நாடுகளோடு நம்ம நாட்டையெல்லாம் ஒப்பிடவே முடியாது தெரியுமா...?''

''நீங்க என்னதான் சொன்னாலும் சரி; நம்ம நாட்ல வறுமைக்கோட்டுக்கு கீழே பாதி

ஜனத்தொகை பசியோடு போராட்டம் நடத்திகிட்டு இருக்கும்போது இந்த விளையாட்டும் அந்த விளையாட்டை விளையாடற வீரர்கள் பண்ற ஆர்ப்பாட்டமும் தேவைதானான்னு தோணுது...இன்னும் சொல்லப் போனா இன்னிக்கு நீங்க டி.வி.யில் தர்ற பேட்டியும் கூட தேவையற்றதுதான். நீங்க பேட்டி தர்றதால யார்க்கு என்ன பிரயோஜனம்...? ஒரு விஞ்ஞானி பேட்டி கொடுத்தாலோ அல்லது ஒரு பேராசிரியர் பேட்டி கொடுத்தாலோ அதுல நாட்டுக்கு உபயோகப்படற மாதிரி ஏதாவது கருத்துக்கள் இருக்கும். உங்க பேட்டியில் என்ன இருக்கும்...?''

''இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க...?''

''சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லிட்டேன் மேடம். நீங்க இனிமேல் இப்படியெல்லாம் டி.வி.க்கு பேட்டி கொடுக்காதீங்க. இப்படி பேட்டி கொடுக்கிறதால இந்தியா ஒண்ணும் வல்லரசாய் மாறிடப் போறது இல்லை. காலாகாலத்துல ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு கணவனோடும், குழந்தைகளோடும் சந்தோஷமாய் இருங்க...''

பேசிவிட்டு ரிஸீவரை வைத்தான் நீலவண்ணக் கண்ணன். டி.வி.யில் குந்தவை சற்று இறுகிய முகத்தோடும் அடுத்த காலரிடம் பேசிக் கொண்டிருந்தாள்.



அடுத்த அரை மணி நேரத்துக்குள் நிகழ்ச்சிகள் முடிந்து குந்தவை இரு கைகளையும் கூப்பி வணக்கம் சொல்ல, டி.வி.யின் மானிட்டர் திரையை இருட்டாக்கினான் நீலவண்ணக் கண்ணன். பிறகு உள்ளே எட்டிப் பார்த்து குரல் கொடுத்தான்.

''காவேரி...''

சமையலறையிலிருந்து ஒரு கருப்பு முகம் எட்டிப் பார்த்தது.

''அய்யா...''

''ஸ்ட்ராங்கா ஒரு காப்பி போட்டு கொண்டாயேன். சாப்பிட்ட உடனேயே தலைவலி பறந்து போயிடணும்...''

''மாத்திரை போட்டுக்கறீங்களாய்யா...?''

''வேண்டாம்... காப்பி மட்டும் கொண்டு வா போதும்...சர்க்கரை கம்மியாய் இருக்கட்டும்...''

''சரிங்கய்யா...'' வேலைக்காரி காவேரி தலையாட்டி விட்டு சமையலறைக்குள் நுழைந்துவிட, நீலவண்ணக் கண்ணன் காப்பிக்காக காத்திருக்க ஆரம்பித்தான்.

அடுத்த பத்து நிமிடத்தில் காப்பி வந்தது. பாதி காப்பியைக் குடித்துக் கொண்டிருக்கும் போது

வாசலில் அழைப்பு மணி சத்தம் கேட்டது. டம்ளரை டீபாயின் மேல் அப்படியே வைத்துவிட்டு எழுந்து போய் கதவைத் திறந்தான் நீலவண்ணக் கண்ணன்.

வெளியே –

குந்தவை நின்றிருந்தாள். கண்களில் கோபம். முகத்தில் 110 டிகிரி வெப்பம்.

ஒரு டென்னீஸ் பந்தின் விட்டம் 7 சென்டி மீட்டர் என்ற அளவில் இருக்க வேண்டும். அதேபோல் பந்தின் எடையும் 57 கிராம்... அல்லது 58 கிராம் இருக்க வேண்டும். சரி, பந்தை அடிக்கும் டென்னீஸ் ராக்கெட்டின் எடை எவ்வளவு இருக்கவேண்டும் தெரியுமா? 3வது அத்தியாயத்துக்கு வாருங்கள். தெரிந்து கொள்ளலாம்.



## 2

குந்தவையைப் பார்த்ததும் நீலவண்ணக் கண்ணன் புன்னகைத்தான்.

''வா... குந்தவை...''

குந்தவை உள்ளே வராமல் மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு வாசற்படியிலேயே நின்றாள். முறைத்தாள். அவன் சிரித்தான்.

''என்ன குந்தவை...? டி.வி. ஸ்டேஷனிலிருந்து நேரா வீட்டுக்குப் போகாமே என்னைப் பார்க்க வந்துட்டே...?''



குந்தவை வெடித்தாள். ''உனக்கு எவ்வளவு கொழுப்பு இருக்குன்னு பார்க்க வேண்டாமா...? அதுக்குத்தான்டா... வந்தேன்...''

''ஓ...! என்னோட கொலஸ்ட்ரால் ரிப்போர்ட் வேணுமா...? ரிப்போர்ட்படி எனக்கு கொலஸ்ட்ராலே கிடையாது தெரியுமா...? பார்க்கறியா...?''

நீலவண்ணக் கண்ணனின் சட்டையை எட்டிப் பிடித்தாள் குந்தவை. ''ஏண்டா இப்படிப் பண்ணினே...?''

''எப்படி...?''

''என்னோட 'லைவ் டெலிகாஸ்ட்' டி.வி.யில் போயிட்டிருக்கும்போது குறுக்கால புகுந்து குழப்பிட்டியேடா...? உன்னை... உன்னை...?''

''ஸாரி... ஸாரி... என்னுடைய டென்னீஸ் தேவதையே...! அது சும்மா ஒரு தமாஷுக்கு...! கோபப்படாதே...!''

''என்ன... தமாஷ்...? உன்னை யார் ஃபோன் பண்ணச் சொன்னது...? அப்படியே ஃபோன் பண்ணினாலும் நான் சந்தோஷப் படும்படியாய் ஏதாவது கேள்வி கேட்க வேண்டியதுதானே...? அதை விட்டுட்டு நீ என்னென்ன கேள்வியெல்லாம் கேட்டுட்டே...! கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றி கிரிடிசைஸ் பண்ணினது சரி... டென்னீஸ் ஆட்டத்தையும் ஏண்டா வம்புக்கு இழுத்தே...?''

''இதோ பார் குந்தவை...! எப்பவுமே டி.வி.யில் வர்ற லைவ் டெலிகாஸ்ட் பேட்டியெல்லாம் ஒரே 'சீரியோ டைப்'பாய் இருக்கும். 'நான் நல்லாயிருக்கேன்... நீங்க நல்லாயிருக்கீங்களா? ஊர்ல மழையா... வெய்யிலா...? நீங்க எப்படி இவ்வளவு அழகாய் இருக்கீங்க...? உங்களுக்கு நாய்க்குட்டியைப் பிடிக்குமா...? இல்லை பூனைக்குட்டியைப் பிடிக்குமா...?' இது மாதிரியான கேள்விகள்தான் எப்பவும் இருக்கும்... நிகழ்ச்சி கொஞ்ச நேரத்திலேயே 'போர்' அடிக்க ஆரம்பிச்சுடும். பார்த்துட்டிருக்கிற நேயர்கள் உடனே கையில் வெச்சிருக்கிற ரிமோட் கண்ட்ரோலைத் தட்டி வேற சானலுக்குப் போயிடுவாங்க. உன்னோட லைவ் டெலிகாஸ்ட் பேட்டிக்கும் அதுமாதிரியான ஒரு நிலைமை வந்துடக் கூடாதுன்னுதான் நான் உனக்கு ஃபோன் பண்ணி காரசாரமா ரெண்டு கேள்வி கேட்டேன்...''

''டி.வி.ஸ்டேஷன்ல எல்லாரும் எப்படி டென்ஷன் ஆயிட்டாங்க தெரியுமா...? எல்லார்க்கும்... உம் மேல சரியான கோபம்...''

''உண்மையைச் சொல்ல வேண்டியது தானே...?''

''என்ன உண்மை...?''

''அய்யா...! அப்படி கேள்வி கேட்டவர் வேற யாருமில்லை, என்னோட காதலர்தான்... பேரு நீலவண்ணக் கண்ணன்... சொந்தமா



பிசினஸ் பண்றார். அடிக்கடி வெளி நாட்டுக்குப் போவார்... விமானப் பயணத்துல ரெண்டு மூணு தடவை சந்திச்சுக்கிட்டோம். எப்படியோ காதல் வந்து ஒட்டிக்கிச்சு...! நான் டென்னிஸில் 'க்ராண்ட் ஸ்லாம்' பட்டம் வாங்கியதும் கல்யாணம்தான்னு சொல்ல வேண்டியதுதானே...?''

''கண்ணன்! இந்த விளையாட்டெல்லாம் அதிகம். நம்ம காதல் விவகாரம் வெளியே யார்க்கும் தெரியக் கூடாதுன்னு நான் எவ்வளவு கேர்ஃபுல்லா பொத்தி பொத்தி வளர்த்துட்டு வர்றேன் தெரியுமா...? நீ என்னடான்னா டமாரம் அடிச்சு எல்லார்க்கும் தெரியப்படுத்திடுவே போலிருக்கே...?!''

''ஸாரி... வெரி ஸாரி குந்தவை...! நான் கேட்ட கேள்விகள் வேற... நம்ம காதல் வேற...! இதனால நம்ம காதல் வெளியே தெரிஞ்சுடும்ன்னு பயப்படறியா...?''

''என்னோட அம்மாவுக்கும் அப்பாவுக்கும் லேசா சந்தேகம் வந்துடுச்சு...!''

''எப்படி...?''

''பேட்டியை முடிச்சுக்கிட்டு நான் டி.வி.ஸ்டேஷனை விட்டு வெளியே வரும்போதே அம்மாகிட்டயிருந்து எனக்கு செல்போன். 'யார்டி அந்த நீலவண்ணக் கண்ணன்...? உன்கிட்டே இவ்வளவு உரிமை எடுத்துக்கிட்டு பேசறான். உனக்கு முன்னே பின்னே தெரியாதவன் இப்படியெல்லாம் பேசமாட்டானே! உண்மையைச் சொல்லு...

யாரவன்?'னு கேட்டு என்னை உலுக்கி எடுத்துட்டாங்க...!''

''பரவாயில்லையே... என்னோட வருங்கால அத்தை...! என்னை கரெக்ட்டா ஜட்ஜ் பண்ணியிருக்காங்க...''

''இதோ பார்... கண்ணன்...! என்னோட அம்மாவும் அப்பாவும் பழைய மாதிரி யில்லை...! என்னைப் பத்தின கனவுகளில் இருபத்தி நாலு மணி நேரமும் மிதந்துட்டு இருக்காங்க...! என்னை ஒரு பெரிய தொழிலதிபர்க்குத்தான் கட்டி வைக்க ணும்ன்னு பெவிகால்ல கால்களை வெச்சுட்ட மாதிரி உறுதியாய் இருக்காங்க. நான் உன்னைக் காதலிக்கிற விஷயம் கடுகளவு அவங்க காதுக்குப் போனாலும் சரி; நம்ம காவியக் காதல் கந்தலாயிடும்... அப்புறம் நீ என்னை டி.வி.யில் நான் மேட்ச் ஆடும்போது மட்டும்தான் பார்க்க முடியும்... நேர்ல பார்க்க முடியாது...'' குந்தவை கோபமாய் பேசிக் கொண்டிருக்கும்போதே அவளுடைய செல்போன் அழைத்தது. எடுத்து கூப்பிடுபவர் யார் என்று பார்த்தாள்.

''அய்யய்யோ...''

''யாரு குந்தவை...?''

''என்னோட அம்மா...''

''பேசு... பேசு...''

செல்போனை காதுக்கு கொடுத்தாள் குந்தவை.

''என்னம்மா...?''



''இப்போ...எங்கே இருக்கே...?''

''கார்ல வந்துட்டிருக்கேம்மா...''

''டி.வி.ஸ்டேஷனை விட்டு புறப்பட்டு எவ்வளவு நேரமாச்சு...? இன்னுமா வந்துட்டிருக்கே..?''

''அம்மா...! டி.வி. ஸ்டேஷனை விட்டு வெளியே வந்துட்டேன்...! ரசிகர்கள் ஆட்டோகிராப் கேட்டு ஒரே தொந்தரவு. எல்லார்க்கும் போட்டு கொடுத்துட்டு கிளம்ப நேரமாயிடுச்சு...''

''இதுக்குத்தான் செல்ஃப் டிரைவிங் வேண்டாம். ட்ரைவரைக் கூட்டிட்டு போன்னு சொன்னேன்... நீ கேட்கலை... ட்ரைவர் இருந்திருந்தா காரை வேகமாய் ஓட்டிக்கிட்டு வந்து இருப்பார் இல்லையா?''

''ட்ரைவரை கூட்டிக்கிட்டு போகாமே போனது தப்புதான்..''

''சரி... இப்ப எந்த ரோட்ல வந்துட்டிருக்கே?''

''பிரகாசம் ரோட்ல...''

''நானும் உங்க அப்பாவும் இப்போ முகப்பேர் பண்ணை பங்களாவுக்கு போய்க் கிட்டிருக்கோம். நீயும் அங்கே வந்துட றியா...?''

''என்னம்மா...! திடீர்ன்னு பண்ணை வீட்டுக்கு கிளம்பறீங்க...''

''அப்பாதான் போய்ட்டு வரலாம்ன்னு சொன்னார். பண்ணையைச் சுற்றி கார்டனிங்

ஓர்க் பண்ணணுமாம்...! அதைப் பத்திப் பேச ஒரு கார்டனரையும் வரச் சொல்லியிருக்கார். நீயும் அங்கே வந்துட்டியானா உன்னோட ஐடியாவையும் சொல்லலாம் இல்லையா...?''

''சரி... வர்றேன்...''

''பார்த்து ட்ரைவ் பண்ணிட்டு வா... காரை வேகமாய் ஓட்டாதே...!'' மறுமுனையில் குந்தவையின் அம்மா புனிதா செல்போனை அணைத்துவிட, குந்தவையும் செல்போனை அணைத்து வலது உள்ளங்கையில் பதுக்கிக் கொண்டு நீலவண்ணக் கண்ணனை ஏறிட்டாள்.

''அம்மாவும் அப்பாவும் முகப்பேர் பண்ணை வீட்டுக்கு கிளம்பிட்டு இருக்காங்களாம். என்னையும் அங்கே வரச் சொல்றாங்க...''

''அப்படின்னா சாய்ந்தரம் நாம மீட் பண்ண முடியாதா... குந்தவை...?''

''ஏன் முடியாது...? நான் இன்னிக்கு டென்னீஸ் ப்ராக்டீஸ் பண்ண அடையார் கோர்ட்டுக்கு வர்ற நாள். கோச் மேத்யூ ஆறு மணிக்குத்தான் கோர்ட்டுக்கு வருவார். நீ கோர்ட்டுக்கு அஞ்சு மணிக்கே வந்துடு.. கோச் வர்ற வரைக்கும் நாம பேசிட்டு இருக்கலாம்...''

''சரி... அடுத்த வாரம் உன்னோட பர்த்டே வருது...! எப்படி செலபரேட் பண்ணலாம் சொல்லு...''



''இதோ பார் கண்ணன்! இப்போதைக்கு நான் உன்கூட உட்கார்ந்து சாவகாசமாய் பேசிட்டிருக்க முடியாது. நான் உடனடியா முகப்பேர் பண்ணை வீட்டுக்குப் போயாகணும். ஈவினிங் பார்க்கலாம்...''

குந்தவை கிளம்பி கார்க்குப் போய் பத்தே விநாடிகளில் அதை விரட்டிக் கொண்டு ரோட்டுக்குப் போனாள். கார் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த நீலவண்ணக் கண்ணன் மறுபடியும் வீட்டுக்குள் நுழைய முயன்றபோது, காம்பௌண்ட் கேட் அருகே 'கூரியர் போஸ்ட்' கொண்டு வரும் நபர் பார்வைக்குக் கிடைத்தார்.

''ஸார்... உங்களுக்கு ஒரு கவர்...''

கையெழுத்தை போட்டுக் கொடுத்துவிட்டு கவரை வாங்கினான். ஃப்ரம் அட்ரஸைப் பார்க்க – அப்பாவின் கையெழுத்து. திருக்கடையூர் அட்ரஸ்.

ஊரில் இருக்கும் அப்பா அபூர்வமாய்த்தான் கடிதம் எழுதுவார். பத்து வரிகள்தான் எழுதுவார். அதில் ஏதாவது ஒரு வரியில் வெடிகுண்டு இருக்கும்.

கவரின் வாயைக் கிழித்தான் நீலவண்ணக் கண்ணன். கவர்க்குள் தபால் கார்டு சைஸில் ஒரு பெண்ணின் போட்டோவும், அந்த போட்டோவோடு 'பின்' செய்யப்பட்ட கடிதமும் பார்வைக்குத் தட்டுப்பட்டது.

முதலில் போட்டோவைப் பார்த்தான். ஒரு கிராமத்தின் போட்டோ ஸ்டுடியோ பின்னணியில் ஸ்டூலின் மேல் உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்த அந்தப் பெண் புன்னகைக்க பிடிவாதம் செய்து காமிராவை முறைத்து இருந்தாள். சரியான கறுப்பு நிறம் என்பது போட்டோவை பார்த்த மாத்திரத் திலேயே புரிந்தது. காதுகளிலும் மூக்கிலும் பழங்காலத்து நகைகள். ஒரு கனமான பட்டுப் புடவைக்குள் வியர்த்துப் போயிருந்தாள்.

அடிவயிற்றுக்குள் ஒரு பயம் முளைக்க, அப்பா எழுதியிருந்த கடித வரிகளைப் படிக்க ஆரம்பித்தான்.

'அன்புள்ள நீலவண்ணக் கண்ணனுக்கு அப்பா எழுதிக் கொண்டது. நான் இங்கு நலமில்லை. காரணம் நீ நான் சொன்ன பேச்சைக் கேட்பது இல்லை. ஃபோனில் பேசினால் உனக்கும் எனக்கும் சண்டை வந்துவிடுகிறது. எனவே இந்தக் கடிதம். இத்துடன் ஒரு பெண்ணின் போட்டோவை அனுப்பியுள்ளேன். பெண்ணின் பெயர் வனிதாமணி. மிராசு குடும்பம். ஒரே பெண். பெண் கறுப்பாக இருந்தாலும் நல்ல லட்சணம். நேரில் பார்த்தால் உனக்கு ரொம்பவும் பிடிக்கும். ஜாதகப் பொருத்தம் பார்த்ததில் உனக்கும் அந்தப் பெண் ணுக்கும் ஒன்பது பொருத்தம் இருக்கிறது.



பெண்ணுக்கு வேண்டியதைச் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரைக்கும் இந்தப் பெண்தான் நம் வீட்டு மருமகள் என்பதை நான் முடிவு செய்துவிட்டேன். நீ இந்தக் கடிதம் பார்த்ததும் உடனே புறப்பட்டு வா! வருகிற ஞாயிற்றுக்கிழமை ரொம்பவும் நல்ல நாள். அன்றைக்கு நிச்சயதார்த்தத்தை வைத்துக் கொள்ளலாம் என்று பெண் வீட்டார் நினைக்கிறார்கள்.

இப்படிக்கு உன் அப்பா.

சங்கரலிங்கம்.

பின் குறிப்பு 1: இத்துடன் அனுப்பி யுள்ள வனிதாமணியின் போட்டோவை முதல் தடவை பார்க்கும்போது பிடிக்காதது போல் தோன்றும். அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தால் கண்டிப்பாய் உனக்குப் பிடிக்கும்.

பின்குறிப்பு 2: உன்னிடமிருந்து எனக்கு சாதகமான பதில் வ்ராவிட்டால் என்னிடமிருந்து உனக்கு பாதகமான பதில் வரும்.

நீலவண்ணக் கண்ணன் வனிதாமணியின் போட்டோயும், அப்பாவின் கடிதத்தையும் ஒன்றன் மேல் ஒன்றாக வைத்து இரண்டாய், நான்காய், எட்டாய் கிழித்து பக்கத்தில் இருந்த குப்பைக் கூடைக்குள் போட்டான்.

*டென்னிஸ் விளையாட்டில் பந்தை அடிக்கும் ராக்கெட்டின் எடை அது உலோகத்தால் செய்யப்பட்டிருந்தாலும் சரி; மரத்தால் செய்யப்பட்டிருந்தாலும் சரி; அதனுடைய எடை 400 கிராமிலிருந்து 450 கிராமுக்குள் இருக்க வேண்டும்.*



## 3

முகப்பேர் பண்ணை வீட்டு சிப் அவுட்டில் உட்கார்ந்து காம்பௌண்ட் கேட்டையே பார்த்துக் கொண்டிருந்த குந்தவையின் அம்மா புனிதாவும், அப்ப அனந்தநாராயணனும் பதட்டமாய் காணப்பட்டார்கள்.

''என்னங்க... இது... குந்தவை இன்னுமா வந்துட்டு இருக்கா...? நா ஃபோன்ல பேசி கூட ஒரு மணி நேரம் இருக்காது?''

''சரியா ஒண்ணேகால் மண நேரமாச்சு...''

''செல்போன்ல அவளை காண்ட்டாக் பண்ணுங்க...''

''பண்ணிட்டுத்தான் இருக்கேன்.. குந்தவையோட லைன் பிஸியா இருக்கு.. யார் கூடவோ பேசிட்டிருக்கான்னு நினைக்கிறேன்...''



''இவ... என்ன பொண்ணோ...? உங்க மாதிரியே பிடிவாதம்...! ஏதாவது ஒரு இடத்துக்கு போகணும்ன்னா ட்ரைவரை கூட்டிட்டுப்போன்னு சொன்னா கேட்கிறது இல்லை... நான் அவளைக் கோபமாய் ரெண்டு வார்த்தை பேசினா உங்களுக்கு கோபம் வந்துடுது!''

''எதுக்காக இப்ப டென்ஷன்...? அவ என்ன சின்னப் பொண்ணா...? வந்துடுவா!''

அனந்தநாராயணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே தொலைவில் தெரிந்த மெயின் ரோட்டில் கார் ஒன்று வெளிச்சத்தில் மின்னியது.

''அதோ...! கார் வருதுங்க...'' புனிதா கை நீட்டி கத்த, அனந்தநாராயணன் எழுந்து நின்று உற்றுப் பார்த்துவிட்டு சொன்னார்.

''அது நம்ம கார் மாதிரி தெரியலையே...?''

''நல்லாப் பாருங்க...''

''பார்த்துட்டேன் புனிதா... அது க்வாலிஷ். கண்ணாடியைப் போட்டுக்கிட்டு பாரு...! தெரியும்...''

கண்ணாடியை மாட்டிக் கொண்டு புனிதா பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த க்வாலிஷ் கார் பங்களாவின் காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்தது.

''என்னங்க இது...! நம்ம பங்களாவுக்குள்ளே வருது? நாம இங்கே பங்களா

வாங்கியிருக்கிற விஷயம் வெளியே யார்க்கும் தெரியாதுன்னு நினைச்சுட்டு இருக்கேன்...''

''மொதல்ல வர்றது யாருன்னு பார்க்கலாம்...'' அனந்தநாராயணன் சொல்லிக் கொண்டே கீழே போர்டிகோவுக்கு வர, க்ரே நிற அந்த 'க்வாலிஷ்' காரிலிருந்து ஒரு நடுத்தர வயது நபரும் ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும் இறுகிப்போன முகங்களோடு இறங்கினார்கள். அவர்களுக்குப் பின்னால் நரைக் கொண்டையோடு கண்ணாடி அணிந்த டாக்டர் பாரிஜாதம் தெரிந்தாள்.

அனந்தநாராயணனும் புனிதாவும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண் டார்கள்.

''என்ன இது! டாக்டரம்மா யாரையோ ரெண்டு பேரைக் கூட்டிகிட்டு இங்கே வந்து இருக்காங்க...''

''என்ன விஷயம்ன்னு தெரியலையே?'' இருவரும் குழப்பமாய் பேசிக் கொண் டிருக்கும்போதே டாக்டர் பாரிஜாதம் பக்கத்தில் வந்தாள். ஒரு சின்னப் புன்னகையோடு கேட்டாள்.

''நான் யார்ன்னு தெரியுதா...?''

அனந்தநாராயணனும் பதிலுக்குப் புன்னகைத்தார்.

''என்ன டாக்டர்...! இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுட்டீங்க. உங்களை மறக்க முடியுமா...? காலம் உங்க வயசைக் கூட்டியிருந்தாலும் முகம் மாறவேயில்லை...''



''பார்த்து இருபது வருஷமாச்சே...! எங்கே என்னை மறந்து இருப்பீங்களோன்னு நினைச்சேன். பை...த...பை...மிஸ்டர் அனந்தநாராயணன்...! நீங்க இப்ப ஃப்ரீயாய் இருக்கீங்களா? உங்க கிட்டே கொஞ்சம் பேசணும்...''

''பேசலாமே... வாங்க...'' அனந்த நாராயணனும் புனிதாவும் அந்த மூன்று பேர்களையும் கூட்டிக் கொண்டு வரவேற்பறைக்குப் போய் சோபாக்களை காட்டினார்கள். ''உட்கார்ங்க...''

அவர்கள் உட்கார்ந்ததும் தாங்களும் உட்கார்ந்தார்கள். சில விநாடி மௌனத் துக்குப் பிறகு அனந்தநாராயணன் டாக்டர் பாரிஜாதத்தை ஏறிட்டார். மெல்லிய குரலில் கேட்டார்.

''சொல்லுங்க டாக்டர்... என்ன விஷயம்?''

பாரிஜாதம் புன்னகைத்தாள். ''மிஸ்டர் அனந்தநாராயணன்! மொதல்ல இவங்க யார்ன்னு உங்களுக்கு அறிமுகப் படுத்திடறேன்... இவர் ராமன் நாயர். ஊர் கேரளா பக்கம் திருஞாலக்குடா என்கிற கிராமம். பூர்வீகம் கேரளாவாய் இருந்தாலும் தமிழ் நல்லாப் பேசுவார். தொழில் விவசாயம்...''

அனந்தநாராயணனும் புனிதாவும், இராமன் நாயர்க்கு வணக்கம் சொல்லிவிட்டு டாக்டர் பாரிஜாதத்திடம் திரும்ப, அவள்

தொடர்ந்தாள். நடுத்தர வயது பெண்ணைக் காட்டியபடி சொன்னாள்.

''இவங்க சுந்தரவள்ளி. இருபது வருஷத்துக்கு முன்னால என்னோட ஹாஸ்பிடலில் நர்ஸாய் வேலை பார்த்தாங்க. நடுவில் அபுதாபியில் இருக்கிற ஒரு ஹாஸ்பிடலில் நல்ல சம்பளத்தில் 'மிட் ஒய்ஃப்' வேலை கிடைச்சதால போயிட்டு திரும்பவும் இப்போ இந்தியாவுக்கு வந்துட்டாங்க...''

பாரிஜாதம் பேச்சை நிறுத்திவிட்டு தலையைக் குனிந்து கொள்ள, அனந்த நாராயணன் பொறுமை இழந்து போனவராய் நிமிர்ந்தார். ''டாக்டர்...! விஷயம் என்னான்னு சொன்னா பரவாயில்லை...''

''இதோ... விஷயத்துக்கு வந்துட்டேன்...! விஷயம் கொஞ்சம் தர்மசங்கடமான விஷயம் தான்... அதைக் கேட்டா உங்களுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாய் கூட இருக்கலாம். உங்க பொண்ணு குந்தவை இப்போ வீட்ல இருக்காளா... இல்லை வெளியே போயிருக்காளா...?''

''வெளியே போயிருக்கா...''

''வர நேரமாகுமா...?''

''இப்ப வந்துடுவா...! ஏன்?''

''நாங்க பேச வந்ததே உங்க பெண் குந்தவையைப் பத்தித்தான்...''

''குந்தவையைப் பத்தியா...?''



''ம்...'' தலையாட்டிய பாரிஜாதம் தொடர்ந்தாள். ''நான் இப்போ ஒரு உண்மையை உங்ககிட்டே சொல்லப் போறேன். அதைக் கேட்டு நீங்க அதிர்ச்சி யடையலாம். மனக்கஷ்டம் அடையலாம். இருந்தாலும் அதை உங்ககிட்டே தெரியப் படுத்திதான் ஆகணும்...''

அனந்தநாராயணனும் புனிதாவும் குழப்பமாய் பாரிஜாதத்தைப் பார்க்க, அவள் மெல்லிய குரலில் சொன்னாள்.

''மிஸ்டர் அனந்தநாராயணன்! மிஸஸ் புனிதா! நீங்க ரெண்டு பேரும் நினைச்சிட்டிருக்கிற மாதிரி குந்தவை உங்களுக்குப் பிறந்த பெண் கிடையாது. அவள் இராமன் நாயரோட பெண்...''

*புல் தரையில் விளையாடப்படும் டென்னீஸ் விளையாட்டு முதன்முதலில் 1873இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அறிமுகப்படுத்தியவர் ஒரு ஆர்மி ஆபீஸர். அவருடைய பெயர் வால்டர் க்ளாப்டன் விங்க்ஃபீல்ட்.*



## 4

அனந்தநாராயணனும், புனிதாவும் தலைகளில் இடி இறங்கிய உணர்வில்

நிலைகுலைந்து போய் இருக்கைகளை விட்டுக் கோபமாய் எழுந்தார்கள்.

''எ . . . எ . . . என் ன . . . சொன்னீங்க...டாக்டர்...?''

பாரிஜாதம் கையமர்த்தினாள். ''டோண்ட் கெட் டென்ஷன்...! இப்படி ஒரு பிரச்னை வரக்கூடாதுதான்...! பட்... வந்துடுச்சு. வந்த பிறகு அதை நாம ஃபேஸ் பண்ணித் தானேயாகணும்...? மொதல்ல ரெண்டு பேரும் உட்கார்ங்க...''

அனந்தநாராயணன் வெடித்தார். ''நாங்க உட்காரலை. நீங்க மூணுபேரும் மொதல்ல எழுந்திரிங்க. நான் 'கெட் அவுட்'ன்னு சொல்றதுக்கு முந்தி வெளியே போயிடுங்க.''

பாரிஜாதம் ஏதோ பேச முற்பட, அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த இராமன் நாயர் குறுக்கிட்டார்.

''நீங்க 'கெட் அவுட்'ன்னு சொன்னதுமே நாங்க உடனே எந்திரிச்சு போயிடறதுக்காக இங்கே வரலை. எங்களுக்கு சொந்தமான சொத்து இங்கே இருக்கு... இருபது வருஷங்களுக்கு முன்னாடி நானும் என்னோட மனைவியும் தொலைச்ச சொத்து அது. அந்த சொத்தை எங்களுக்கு கொடுத்துட்டா நாங்க போயிடறோம்...''

புனிதாவின் கோபம் இப்பதே பயமாய் மாறி கண்களில் நீரைத் திரள வைத்தது கணவனிடம் திரும்பினாள்.



''என்னங்க.. அந்த ஆள் ஏதோ 'சொத்துகித்து'ன்னு பேசிட்டிருக்கார். நீங்க பார்த்துகிட்டு சும்மா நின்னுட்டிருக்கீங்க...?''

அனந்தநாராயணன் தன்னுடைய சுட்டு விரலை நீட்டிக் கொண்டு இராமன் நாயரை நோக்கிப் போக, நர்ஸ் சுந்தரவள்ளி இடைமறித்தாள்.

''இதோபாருங்க...! நீங்க புருஷன் பெஞ்சாதி கோபப்படறதுல அர்த்தமே கிடையாது. இராமன் நாயர் சொல்றது ரொம்பவும் சரி! இருபது வருஷத்துக்கு முந்தி அவர்க்கு சொந்தமான சொத்து ஒண்ணை டாக்டர் சொன்னதால திருடி உங்ககிட்டே கொடுத்தேன். அந்த சொத்து தான் குந்தவை. நான் இந்த விஷயத்தில் பொய் சொல்லலாம். ஆனால் டாக்டர் பொய் சொல்வாரா...? இருபது வருஷங்களுக்கு முன்னாடி நடந்த சம்பவம் இது. டாக்டரோட ஹாஸ்பிடலில் உங்க மனைவிபுனிதாவும் டெலிவரிக்காக அட்மிட் ஆயிருந்தாங்க. அதே சமயத்துல இராமன் நாயரின் மனைவி தங்கம்மாவும் பிரசவத்துக்காக லேபர் வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்தாங்க. ஒரு ராத்திரி யில் ரெண்டு பேர்க்கும் லேபர் பெயின் எடுத்து நார்மல் டெலிவரியாச்சு. பெண் குழந்தைகள் பிறந்தது. உங்க மனைவிக்குப் பிறந்த குழந்தை சில நிமிஷங்களிலேயே இறந்து போயிடுச்சு. டாக்டர் என்னைக் கூப்பிட்டார். 'புனிதாவுக்கு இனிமே குழந்தை

பிறக்க வாய்ப்பு இல்லை. பட், தங்கம்மாவுக்கு அப்படியில்லை. அவளுடைய உடல்நிலை நிறைய குழந்தைகளை பெத்துக்கக் கூடிய அளவில் இருக்கிறதால உயிரோடு இருக்கிற குழந்தையை புனிதாவுக்குப் பக்கத்துல போட்டுடு. இறந்த குழந்தையை தங்கம்மாவுக்குப் பக்கத்துல படுக்க வெச்சுடு. மத்ததை நான் பார்த்துக்கிறேன்னு சொல்லிட்டாங்க. டாக்டர் சொன்னதுல நியாயம் இருக்கவே, அப்படியே பண்ணிட்டேன்...''

சுந்தரவள்ளி சொல்லி முடித்ததும் அனந்தநாராயணன் கோபத்தில் இரண்டு கைகளையும் வீசிக் கொண்டு கத்தினார்.

''என்ன எல்லாருமா சேர்ந்து கதை சொல்றீங்களா? என் பொண்ணு குந்தவை இன்னிக்கு ஒரு டென்னிஸ் விளையாட்டு வீராங்கனைன்னு தெரிஞ்சதும் ஒரு ட்ராமாவை அரங்கேற்றம் பண்ணி கிடைக்கிற பணத்தை சுருட்டிட்டுப் போகலாம்ன்னு வந்தீங்களா...? புனிதா! அந்த செல்போனை எடு. போலீஸுக்கு ஃபோன் பண்ணலாம்...''

ராமன்நாயர் கையை உயர்த்தினார்.

''மிஸ்டர் அனந்தநாராயணன்...! நீங்க இப்ப சொன்னதுதான் சரி... நீங்க போலீஸுக்கு ஃபோன் பண்ணுங்க. அவங்க வரட்டும். நான் இங்கே வர்றதுக்கு முன்னாடியே டாக்டர் கிட்டே போலீஸுக்குப்



பாமிடலாம்ன்னு சொன்னேன். அவங்க கட்கலை. நேர்ல போய் பேசிப் பார்க்கலாம்ன்னு சொன்னதால நான் வந்தேன். போலீஸ் வராமே இந்தப் பிரச்னை முடியாதுன்னு எனக்குத் தெரியும். ஸோ... ஃபோன் பண்ணுங்க...''

அனந்தநாராயணன் தன் கையில் இருந்த செல்போனில் போலீஸைக் கூப்பிட முயல, டாக்டர் பாரிஜாதம் குரல் கொடுத்தாள்.

''ஒரு நிமிஷம்...''

''எ...ன்...ன...?''

''நான் சொன்னது பொய்ன்னு நீங்க நினைக்கறீங்க. இல்லையா?''

''ஆமா...''

''குந்தவை உங்க பொண்ணு இல்லைன்னு இதே இடத்துல நான் நிரூபிச்சுக் காட்டினா உண்மையை ஒத்துக்குவீங்களா...?''

அனந்தநாராயணன் நிமிர்ந்தார்.

''இதே இடத்துல நிரூபிக்கப் போறீங்களா...? எப்படி...?''

''குந்தவை உங்க ரெண்டு பேர்ல யார் ஜாடை?''

''அது... வந்து... வந்து...''

''சொல்லுங்க... யார் ஜாடை...?''

''குந்தவை கிட்டே எங்க ரெண்டு பேரோட ஜாடையும் கிடையாது. அவளுக்கு

பாட்டியோட அதாவது என் அம்மாவோ
ஜாடை...''

''உங்க மதர் இப்போ உயிரோ
இருக்காங்களா...?''

''இல்லை...''

''மிஸ்டர் அனந்தநாராயணன்! உங்
அம்மாவையும் எனக்குத் தெரியும்
குந்தவைக்கு உங்க வீட்ல இருக்கிற யா
ஜாடையும் கிடையாது. ஜாடையை விடுங்க
அவளோட நிறமாவது யார்க்காவ
இருக்கா...?''

''இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்
டாக்டர்?''

''இராமன் நாயரோட மனைவியை நீங்
பார்த்து இருக்கீங்களா...?''

''இல்லை...''

''அவங்களைப் பார்த்து இருந்தா நீங்
இப்படியெல்லாம் பேச மாட்டீங்க! இப்பவு
ஒண்ணும் கெட்டுப் போயிடலை. இராம
நாயரோட மனைவி தங்கம்மா வெளியே
போர்டிகோவில் நின்னுட்டிருக்கி
'க்வாலிஷ்' வேனுக்குள்ளேதான் இரு
காங்க... இப்ப வரச் சொல்றேன்... பாருங்க
சுந்தரவள்ளி...''

''டாக்டர்...''

''போய் தங்கம்மாவைக் கூட்டிகிட்டு
வா...''



சுந்தரவள்ளி போர்டிகோவில் நின்றிருந்த
காரை நோக்கிப் போனாள்.

சரியாய் ஒரு நிமிடம்.

சுந்தரவள்ளியோடு அந்த தங்கம்மாள்
கண்களில் நீரோடு போர்டிகோ படியேறி
உள்ளே வந்தாள். அனந்தநாராயணனையும்,
புனிதாவையும் வியப்பு வீழ்த்தியது.

தங்கம்மாவுக்கு அப்படியே – ஜெராக்ஸ்
எடுத்த தினுசில் அப்பட்டமாய் குந்தவையின்
ஜாடை.

அதே உயரம். அதே நிறம். அதே
சுருட்டை முடி.

டாக்டர் பாரிஜாதம், அனந்த
நாராயணனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள்.

''இப்ப... என்ன... சொல்றீங்க...?''

''டா...டாக்டர்... இது...இது...?''

''அனந்தநாராயணன்...! தங்கம்மாவுக்கு
இப்போ கிட்டத்தட்ட அம்பது வயது.
குந்தவைக்கு அம்பது வயசாகும்போது அவ
அந்த சமயத்துல இப்படித்தான் இருப்பா...!
குந்தவை உங்க பொண்ணு கிடையாதுங்
கிறதுக்கு இந்த ப்ரூப் போதுமா... இன்னும்
ஏதாவது வேணுமா?''

டாக்டர் பாரிஜாதம் கேட்டுக் கொண்டு
இருக்கும்போதே –

காம்பௌண்ட் கேட் அருகே கார் ஹார்ன்
சத்தம் கேட்டது.

அனந்தநாராயணன் திரும்பிப் பார்த்தா குந்தவையின் கார்.

> இங்கிலாந்து விம்பிள்டனில் ஆண் களுக்கான முதல் டென்னீஸ் போட்டி 1877ஆம் ஆண்டிலும் பெண்களுக்கான முதல் டென்னீஸ் போட்டி 1884ஆம் ஆண்டிலும் நடைபெற்றது. இந்தப் போட்டிகள் 'CROQUET' என்னும் கிளப் சார்பில் நடத்தப்பட்டது.



## 5

குந்தவையின் காரை பார்வையில் வாங்கியதுமே அரண்டு போன அனந் நாராயணன் பாரிஜாதத்தை தவிப்பாய் ஏறிட்டார்.

''டாக்டர்...! எம் பொண்ணு குந்தவை வந்துகிட்டு இருக்கா...! அவளுக்கு இந்த விஷயம் எதுவும் தெரிய வேண்டாம், தெரிஞ்சா அவ ரொம்பவும் அப்செட் ஆயிடுவா. மொதல்ல இராமன் நாயரோட மனைவி தங்கம்மாவை பக்கத்து ரூம்ல போய் மறைவாய் இருக்கச் சொல்லுங்க...''

''என்னிக்கு இருந்தாலும் அவளுக்கு இது தெரிய வேண்டிய விஷயம்தானே...?''

''ப்ளீஸ்... டாக்டர்...! இப்ப அவளுக்கு எந்த விஷயமும் தெரிய வேண்டாம்...



மொதல்ல தங்கம்மாவை அந்த அறைக் குள்ளே போகச் சொல்லுங்க... நம்ம விஷயத்தை அப்புறமா பேசி முடிவு பண்ணிக்கலாம்...''

பாரிஜாதம் தங்கம்மாவுக்கு கண்ணைக் காட்ட, அவள் கண்ணீரில் நனைந்த கண்களை சேலைத் தலைப்பால் ஒற்றியபடி பக்கத்து அறையை நோக்கி வேகமாய்ப் போய் மறைந்து கொண்டாள். அனந்தநாராயண் பார்வையை காம்பௌண்ட் கேட்டுக்கு கொண்டு போக, குந்தவையின் கார் புயல் வேகத்தில் உள்ளே வந்து போர்டிகோவில் நின்றது?

எல்லோரும் இறுகிப்போன முகங் களோடு உட்கார்ந்திருக்க, காரினின்றும் இறங்கிய குந்தவை ஒரு எல்.கே.ஜி. குழந்தையின் சந்தோஷத்தோடு போர்டிகோ படியேறி உள்ளே வந்தாள். வரவேற்பறையில் உட்கார்ந்திருந்த அந்த சின்னக் கூட்டத்தைப் பார்த்ததும் தன் அழகான நெற்றியைச் சுருக்கினாள்.

அனந்தநாராயணன் வலிய ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டு கேட்டார்.

''ஏம்மா... லேட்டு...?''

''ஹைவேஸ் ரோடில் பயங்கர ட்ராஃபிக் ஜாம். ஊர்ந்து ஊர்ந்துதான் வரவேண்டி யிருந்தது. உங்களுக்குத் தகவல்

கொடுக்கலாம்ன்னா செல்லில் சார்ஜ் வேற இல்லை. எங்கயோவது இறங்கி எஸ்.டி.டி. பூத்திலிருந்து ஃபோன் பண்ணலாம்ன்னா கூட்டம் சேர்ந்துடுமோன்னு பயம்...''

அனந்தநாராயணன் தன்னுடைய மனக்கொந்தளிப்பை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு பாரிஜாதத்தை காட்டியபடி குந்தவையிடம் கேட்டார்.

''இவங்க யார்ன்னு உனக்குத் தெரியுதாம்மா...?''

''தெரியுமே...! டாக்டர்தானே...? நீங்க ஒரு தடவை எங்கேயோ அறிமுகப் படுத்திமிருக்கீங்க... பேர்தான் மறந்துட் டேன்...''

''பாரிஜாதம்...''

''ஆமா...இப்போ ஞாபகத்துக்கு வருது... அம்மாவுக்கு இவங்கதானே பிரசவம் பார்த்தாங்க...'' என்றவள் பாரிஜாதம் பக்கம் திரும்பினாள்.

''ஹலோ... டாக்டர்... எப்படியிருக் கீங்க...?''

''ஃபைன்...' சிரித்த டாக்டர் எழுந்து அவளுடைய தலையைக் கோதிவிட்டாள்.

''இந்தியாவுக்கே உன்னால இப்ப பெருமை. எந்தப் பத்திரிகையைப் புரட்டினாலும் உன்னோட போட்டோதான்...''

''எல்லாமே நீங்க டெலிவரி பார்த்த ராசி டாக்டர்...''



''அப்படி சொல்லாதேம்மா...! இறைவ னோட கருணைன்னு சொல்லு...! ஆண்டவன் எல்லார்க்கும் ஒவ்வொரு விதமான திறமையைக் கொடுத்து இருக்கான். அதை நம்ம உழைப்பால வெளிப்படுத்தனும்... நீ உனக்குள்ளே இருந்த டென்னீஸ் ஆட்டத்தை உன்னோட முழுமையான பயிற்சி மூலமா வெளிப்படுத்தியிருக்கே...! பை... த...பை... இவங்க யார்ன்னு உனக்கு அறிமுகப்படுத்திடறேன் குந்தவை...!இவர் என்னோட நண்பர் இராமன் நாயர். கேரளாவிலிருந்து வந்திருக்கார். இவங்க சுந்தரவள்ளி. என்னோட நர்ஸிங்ஹோமில் வேலை பார்த்துகிட்டு இருந்தவங்க. இப்போ கேரளாவுக்குப் போயிட்டாங்க...! இராமன் நாயர் கேரளாவில் எர்ணாகுளத்தில் ஒரு கல்சுரல் ப்ரோக்ராம் பண்றார்...! அந்த விழாவுக்கு நீ சீஃப் கெஸ்ட்டா வந்தா அவர்க்கு ரொம்பவும் பெருமையாய் இருக்குமாம். எனக்கு ஃபோன் பண்ணி நீங்க ஏற்பாடு பண்ண முடியுமான்னு கேட்டார். நான் பேசிப் பார்க்கனும்ன்னு சொன்னேன். உடனே புறப்பட்டு வந்துட்டார்...''

''என்னிக்கு ஃபங்ஷன் டாக்டர்...?''

''வர்ற மாசம் இருபத்தி மூணாம் தேதி...''

''ஸாரி டாக்டர்...! நான் அடுத்த மாசம் ஏழாம் தேதிக்கெல்லாம் ஆஸ்திரேலியா போயிடுவேன். ஆஸ்திரேலியா ஓப்பன்

டென்னீஸ் போட்டி பதினாறாம் தேதி தொடங்குது. இருபத்தொன்பதாம் தேதி வரைக்கும் மேட்ச் நடக்கும். அதுவுமில்லாமே நான் பொது நிகழ்ச்சிகளில் கலந்துக்கிறதை அவ்வளவா விரும்பறதில்லை. அப்பாவும் அம்மாவும் உங்ககிட்டே சொல்லியிருப் பாங்களே...?''

''ம்... இப்ப நீ சொன்னதையேதான் சொன்னாங்க... இருந்தாலும் உன்கிட்டே ஒரு வார்த்தை கேட்டுப் பார்க்கலாம்ன்னுதான் உனக்காக வெயிட் பண்ணிட்டிருந்தோம்...''

''வெரி... வெரி... ஸாரி டாக்டர்...''

''பரவாயில்லேம்மா...! இவங்க ஆசைப்பட்டதால்தான் கூட்டிட்டு வந்தேன். டென்னீஸ் விளையாட்டில் நீ உலக அளவில் பெரிசா பேசப்படணுமங்கறதுதான் என்னோட ஆசை. விஷ்... யூ... ஆல் த பெஸ்ட்...''

''தேங்க்யூ டாக்டர்...! உங்க மாதிரியான வெல்விஷர்களோட ஆசிகள் இருக்கப் போய்த்தான் என்னால இந்த விளையாட்டில ஓரளவுக்கு சாதிக்க முடியுது...''

''இந்த பணிவே உனக்கு பெரிய வெற்றிகளைத் தரும்...''

குந்தவை புன்னகைத்தாள்.

''ஓ.கே... டாக்டர்...! அப்பா அம்மாகிட்டே பேசிட்டிருங்க...''

''நீ போய் ரெஸ்ட் எடும்மா...! நாங்க பேசிக்கறோம்...''



குந்தவை ஹாலுக்குள் மறைந்து – மாடியை நோக்கிப் போய்விட, பாரிஜாதம் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு அனந்தநாராயணனை ஏறிட்டாள்.

''மிஸ்டர் அனந்தநாராயணன்...! இராமன் நாயரோட மனைவி தங்கம்மாவைப் பார்த்த பின்னாடியும் குந்தவை உங்க பொண்ணு தான்னு நம்பறீங்களா...?''

அனந்தநாராயணனும் புனிதாவும் வியர்த்துப்போன முகங்களோடு பாரி ஜாதத்தை ஏறிட்டார்கள்.

''டாக்டர்...! இத்தனை வருஷங்களுக்கு அப்புறம் இப்படியொரு பிரச்னை கிளம்பும்ன்னு நாங்க கொஞ்சம்கூட எதிர் பார்க்கலை. இந்த விஷயத்தில் மேற்கொண்டு என்ன பண்றதுன்னும் எங்களுக்குத் தெரியலை. இன்னிக்கு இது சம்பந்தமாய் எந்த பேச்சும் வேண்டாம். வர்ற ஞாயிற்றுக் கிழமை சாயந்தரம் அஞ்சு மணிக்கு நீங்க நாலு பேரும் இங்கே வாங்க. அந்த சமயத்துல குந்தவை இங்கே இருக்க மாட்டா. டென்னீஸ் ப்ராக்டீஸுக்காக அடையார் கோர்ட்டுக்குப் போய்ட்டு ஏழு மணிக்கு மேல்தான் திரும்பி வருவா. அந்த ரெண்டு மணி நேரத்துக் குள்ளே நாம ஏதாவது பேசி முடிவு பண்ணலாம்.''

இராமன் நாயர் குறுக்கிட்டார்.

''இப்ப... இப்படி சொல்லிட்டு வர்ற ஞாயிற்றுக் கிழமை வெளியூர் எங்கேயும் போயிட மாட்டீங்களே...?''

''நாங்க ஒரு வார்த்தை சொன்ன சொன்னதுதான்...!''

''ஒருவேளை நீங்க வார்த்தை தவறிட்ட நாங்க நேரா போலீஸுக்கு போயிடுவோம் அதுக்கப்புறம் நீங்க வருத்தப்பட்டு ஒரு பிரயோஜனமும் கிடையாது...''

''நோ... நோ...! நீங்க வாங்க! ஞாயிற்றுக் கிழமை நாங்க கண்டிப்பா இருப்போம்...''

எல்லோரும் எழுந்தார்கள். இராமன் நாயர், தங்கம்மாவைக் கூட்டிக் கொண்டு போர்டிகோவில் இருந்த க்வாலிஷ் காரை நோக்கிப் போக, பாரிஜாதம் அனந்த நாராயணனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள். மெல்லிய குரலில் பேசினாள்.

''டென்ஷன்படாமே நிதானமா உட்கார்ந்து யோசனை பண்ணி ஒரு முடிவுக்கு வாங்க... எந்த ஒரு அவசர முடிவையும் எடுத்துட வேண்டாம்...''

*ஆஸ்திரேலியாவில் 1880ஆம் வருடம் தான் முதன்முதலாக டென்னிஸ் விளையாட்டுப் போட்டி மெல்போர்ன் நகரில் தொடங்கப்பட்டது. ஆட்டத்தின் விதிகள் அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நிறையவே வேறுபட்டது. பிறகு இரு நாடுகளும் இணைந்து பேசி பொதுவான விளையாட்டு விதிகளை உருவாக்கினார்கள்.*





# 6

**மா**டியறைக்குப் போன குந்தவை ஒரு 'தொள தொள' சுடிதார்க்கு மாறி, சோபாவுக்கு வந்து சாய்ந்து, டி.வி.பார்ப்பதற்காக ரிமோட் கண்ட்ரோலோடு உட்கார்ந்தபோது அவளுடைய செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தாள்.

நீலவண்ணக் கண்ணன்.

ஃபோனை காதுக்குக் கொடுத்தாள்.

''என்ன கண்ணன்...? இப்பத்தானே உன்கிட்டே பேசிட்டு வர்றேன். அதுக்குள்ளே என்ன ஃபோன்?''

''குந்தவை! உனக்குப் பக்கத்துல இப்போ யாரும் இல்லையே...?''

''இல்லை... ஏன்...?''

''அப்பா ஊரிலிருந்து கூரியர் மூலமா எனக்கு ஒரு லெட்டர் அனுப்பியிருக்கார். கிராமத்துல எனக்கொரு பொண்ணைப் பார்த்து முடிவு பண்ணிட்டாராம். ஜாதகம் பார்த்ததுல ஒன்பது பொருத்தம் இருக்காம். பொண்ணு பெரிய இடமாம்...''

''நீ அதிர்ஷ்டக்காரன்டா...!''

''குந்தவை! பி... சீரியஸ்...! என்னோட இதயம் இப்போ ஆசிட்ல முக்கி எடுத்தது

மாதிரி வெந்துகிட்டு இருக்கு. நீ வேற அதுல மொளகாய்ப் பொடி தூவாதே...''

''சரி... சரி.. மூக்கைச் சிந்தாதே.:.! உங்க அப்பா லெட்டர்தானே போட்டிருக்கார்.. கல்யாணத்தை நடத்திடலையே?''

''குந்தவை! இந்த தடவை அப்பாவோட லெட்டர் தலிபான் தீவிரவாதிகள் மிரட்டற மாதிரியான தொனியில் இருக்கு. கடிதத்தோட கடைசியில் ரெண்டு பின்குறிப்புகள் எழுதியிருக்கார் பாரு... அப்படியே ஆடிப் போயிட்டேன். அதை மட்டும் சொல்லட்டுமா...?''

''சொல்லு, பார்க்கலாம்...''

''பின்குறிப்பு நம்பர் ஒண்ணு இத்துடன் அனுப்பியுள்ள வனிதாமணியின் போட்டோவை முதல் தடவை பார்க்கும்போது பிடிக்காதது போல் தோன்றும். அடிக்கடி எடுத்து பார்த்துக் கொண்டிருந்தால் கண்டிப்பாய் உனக்குப் பிடிக்கும். பின் குறிப்பு நம்பர் ரெண்டு – உன்னிடமிருந்து எனக்கு சாதகமான பதில் வராவிட்டால் என்னிடமிருந்து உனக்கு பாதகமான பதில் வரும்...''

''இது என்ன பயங்கர ப்ளாக்மெயிலாய் இருக்கு...! சரி...நீ இப்போ என்ன பண்ணலாம்ன்னு இருக்கே?''

''குந்தவை...! நீயும் நானும் காதலிக்கிற விஷயத்தை என்னோட அப்பாகிட்டே



சொல்லிட்டாத்தான் அவர் எனக்குப் பெண் பார்க்கிற விளையாட்டை நிறுத்துவார். இல்லைன்னா அவர் இப்படித்தான் எதையாவது பண்ணிட்டு இருப்பார்...''

''வேண்டாம் கண்ணன்...! நான் க்ராண்ட்ஸ்லாம் பட்டத்தை ஜெயிக்கிற வரைக்கும் நீ நம்ம காதலைப் பற்றி யார்கிட்டேயும் மூச்சு காட்டக் கூடாது...''

''இப்படிச் சொன்னா... எப்படி குந்தவை...? நான் என்னோட அப்பாகிட்டே மட்டும் சொல்லிடறேனே...!''

''உங்கப்பா ஒரு ஓட்டை வாய்ன்னு நீதானே சொன்னே? அவர் ஏதாவது உளறி வைக்கப் போக – ப்ரஸ்காரங்க காதுகளுக்கு ந்யூஸ் எப்படியும் போயிடும்... நான் 'க்ராண்ட்ஸ்லாம்' ஜெயிக்கிற வரைக்கும் உங்கப்பாவை சமாளியேன்...''

''முடியாது போலிருக்கே...! அந்த வனிதாமணியோட கிராமத்தையே கூட்டிட்டு வந்துடுவார் போலிருக்கே...''

''இதோ பார் கண்ணன்...! நீ என்ன சொன்னாலும் சரி, நான் பச்சைக்கொடி காட்டுகிற வரைக்கும் நம்ம காதலைப் பத்தி நீ வாயையே திறக்கக் கூடாது...''

''ப்ளீஸ்... குந்தவை...!''

''பேசாதே...! செல்போனை சாத்து; என்னோட அம்மாவும், அப்பாவும் மாடிப்படி ஏறி வர்ற சத்தம் கேட்குது. ராத்திரி ஃப்ரீயாய்

இருப்பேன். அப்ப உன்னோட புலம்பலி ரெண்டாவது பாகத்தைக் கேட்டுக்கறேன்..

குந்தவை தன் செல்போனை அணைத் வலது கைக்குள் அதக்கிக் கொண்ட விநா

அனந்தநாராயணனும், புனிதாவ உள்ளே வந்தார்கள்.

குந்தவை அவர்களை ஏறிட்டப கேட்டாள்.

"என்னப்பா...! அவங்க எல்லாரு போயிட்டாங்களா?"

"ம்..."

"கல்ச்சுரல் ப்ரோக்ராமுக்கும் ஓ டென்னீஸ் ப்ளேயருக்கும் என்ன சம்பந்தம் யாராவது ஒரு சினி ஆக்ட்ரஸ்ஸை கூப்பி வேண்டியதுதானே...?"

"ம்..."

குந்தவை தன்னுடைய அப்பாவையும் அம்மாவையும் ஒரு ஆச்சர்யப் பார்வை பார்த்தாள்.

"என்ன...! ரெண்டு பேரும் ஒரே மாதி டல்லடிக்கறீங்க...? வந்துட்டு போனவங் கிட்டே ஏதாவது பிரச்னையா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா. ஊர் பூராவும் உன்னைப் பத்தி பெருமைய பேசிக்கறாங்க...ஆஸ்திரேலியா ஓப்ப டென்னீஸ் போட்டியில் நீ ஃபைனல்



வரைக்கும் முன்னேறுவேன்னு கோடிக் கணக்கான ரூபாய்களுக்கு பெட்டிங் நடந்து இருக்கு...டெக்கான் ஹெரால்டில் புள்ளி விபரங்களோடு போட்டிருக்கான்..."

"அதுக்காக நாம என்னப்பா பண்ண முடியும்...?"

"மக்களோட எதிர்பார்ப்பை நாம நிறைவேத்தி வைக்க வேண்டாமா...?" புனிதா சொல்ல, குந்தவை புன்னகைத்தாள்.

"அம்மா...! எந்தஒரு விளையாட்டிலும் வெற்றி தோல்வி சகஜம். வெற்றி வரும்போது நாம எப்படி சந்தோஷப்படறோமோ, அதே மாதிரி தோல்வி வரும்போதும் அதை பூரணம் பண்ணிக்கிற மனப்பக்குவம் வேணும்..."

"நா ஒண்ணு சொன்னா நீ கேப்பியா குந்தவை?"

"சொல்லும்மா..."

"நீ ஆஸ்திரேலியா ஓப்பன் டென்னீஸ் போட்டியில் ஜெயிக்கணும்ன்னா உடனடியா சிங்கப்பூர் புறப்பட்டுப் போய் அங்கேயிருக்கிற டென்னீஸ் கோச் ராபர்ட்ஸனிடம் கோச்சிங் எடுத்துக்கிட்டாத்தான் முடியும்..."

"ஏன்..... இங்கேயிருக்கிற நம்ம கோச் 'மேத்யூ'வுக்கு என்ன குறைச்சல்...? மேத்யூ ஒரு அற்புதமான கோச். அவர் கற்றுக் கொடுத்த டென்னீஸ் நுணுக்கங்களை உபயோகப்படுத்திதான் பல போட்டிகளில் ஜெயிச்சிருக்கேன்..."

''மேத்யூ குறை சொல்ல முடியா
கோச்தான்! நாங்க மறுக்கலை. இருந்தாலு
அவரைவிட ஒரு படி திறமையுள்ளவ
ராபர்ட்ஸன். தொடர்ந்து மூணு தடவை
ஆஸ்திரேலியா ஓப்பன் பட்டத்தை ஜெயிச்
ஓலிவியாவுக்கு ராபர்ட்ஸன்தான் கோச்
இன்னிக்கு அந்த ஓலிவியா கோடி
கணக்கான டாலர்களில் நீச்சல் அடிச்சி
டிருக்கா...! போன தடவை நாம சிங்கப்பூ
போயிருந்தபோது ராபர்ட்ஸன் கிட்டே நா
பேசும்போது அவர் என்ன சொன்னா
தெரியுமா குந்தவை...? குந்தவை
விரும்பினா அவளுக்கு நான் கோச்சா
இருக்கத் தயார்ன்னு சொன்னார். நீ ஏ
உடனடியா சிங்கப்பூர் போய் ராபர்ட்ஸனை
கோச்சாய் ஏத்துக்கிட்டு ஒரு மாச காலத்துக்
ப்ராக்டீஸ் பண்ணக் கூடாது...?''

குந்தவை அவர்களை வியப்பா
பார்த்தாள்.

''அப்பா...! அம்மாவுக்கும் உங்களுக்கும்
இன்னிக்கு என்னாச்சு...? பெங்களூர்க்கு
தனியா போறேன்னு சொன்னாலே ஆயிர
காரணம் சொல்லி வேண்டாம்ன்னு
தடுத்துடுவீங்க. இப்ப என்னடான்னா
சிங்கப்பூர்க்கு போய் ராபர்ட்ஸனை கோச்சா
வெச்சுக்கிட்டு ப்ராக்டீஸ் பண்ணுன்னு
சொல்றீங்க... என்னால நம்ப முடியலை
யேப்பா...! நான் ஆஸ்திரேலியா ஓப்பன்
போட்டியில் ஜெயிக்கணும் என்கிற



காரணத்தைக் காட்டிலும் ஏதோ ஒரு வலுவான காரணம் இருக்கப் போய்த்தான் என்னை சிங்கப்பூர்க்கு போகச் சொல்றீங்க... உண்மையா... இல்லையா...?''

அனந்தநாராயணன், குந்தவையை ஏறிட்டார். ''நீ நினைக்கிற மாதிரி அப்படியெல்லாம் எந்த ஒரு காரணமும் இல்லேம்மா! நீ சிங்கப்பூர்க்கு போகணும்ன்னு சொன்னபோதெல்லாம் உன்னைத் தனியா அனுப்ப பயந்துட்டு வேண்டாம்ன்னு சொல்லிட்டிருந்தோம். அது தப்புன்னு இப்பத்தான் எங்க மனசுக்குப்பட்டது...''

''சரி...! சிங்கப்பூர்க்கு நீங்க வரலையா...?''

''நீ மொதல்ல போம்மா... ஒரு வாரம் கழிச்சு நானும் அம்மாவும் வர்றோம்... இங்கே எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு...''

''வேலையா...! என்ன வேலை...?''

''நாம புதுசா வாங்கின சில ப்ராப்பர்ட்டிஸை சரியான முறையில் டாக்குமெண்டேஷன் பண்ணணும்ன்னு ஆடிட்டர் சொல்லி யிருக்கார். இந்த மாசம் முப்பத்தி ஒண்ணாம் தேதிக்குள்ளே அதை பண்ணணும். அந்த வேலையை முடிச்சுட்டு நானும் அம்மாவும் சிங்கப்பூர் வந்துடறோம்...''

''அப்பா...! நான் என்ன சொல்றேன்னா...'' குந்தவை குரலை இழுக்க அனந்தநாராயணன் கையமர்த்தினார்.

''இதோ பாரம்மா...! நீ எந்தக் காரணத்தையும் சொல்லாதே...! நீ சிங்கப்பூர் போய் ராபர்ட்ஸன் கிட்டே கோச்சிங் எடுத்துக்கிட்டாதான் ஆஸ்திரேலியா ஓப்பன் டென்னீஸ் பட்டத்தை நெருங்க முடியும். இல்லேன்னா இதே தர வரிசையில் காலம் பூராவும் இருக்க வேண்டியிருக்கும்...''

''அ...ப்...பா...''

''பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணு... எந்த ஃப்ளைட்ல இடம் கிடைக்குதுன்னு நான் பார்க்கிறேன்...'' அனந்தநாராயணன் தன்னிடமிருந்த செல்போனை எடுத்துக் கொண்டு ட்ராவல் ஏஜென்ஸிக்கான எண்களைத் தட்ட ஆரம்பித்தார்.

*1912ஆம் ஆண்டில்தான் டென்னீஸ் விளையாட்டு பல •துறையினரால் விரும்பப்பட்டு 'THE INTERNATIONAL TENNIS FEDERATION' என்ற அமைப்பு லண்டனில் உருவாக்கப்பட்டது.*



## 7

**அ**டையார் டென்னீஸ் கோர்ட். மாலை ஐந்து மணி.

போகன்வில்லா பூக்கள் பூத்த பந்தலுக்குக் கீழே இருந்த சிமெண்ட் பெஞ்சில் பக்கம் பக்கமாய் உட்கார்ந்திருந்தார்கள் குந்தவையும், நீலவண்ணக் கண்ணனும். டென்னீஸ் கோர்ட் கிளப்பில் கூட்டம் இல்லை.

''என்ன குந்தவை, விளையாடறியா...? இப்ப எதுக்காக... அவசர அவசரமாய் சிங்கப்பூர் ட்ரிப்...?''

''அதான் சொன்னேனே கண்ணன்...! டென்னீஸில் கூடுதல் பயிற்சி எடுத்துக்க... அங்கேயிருக்கிற ராபர்ட்ஸன் என்கிற இண்ட்டர்நேஷ்னல் கோச்கிட்டே போறேன்.''

''காலையில் இதைப்பத்தி நீ சொல்லவேயில்லையே...?''

''காலையில் எனக்கு இது தெரியாதே...? மத்தியானம்தான் அப்பாவும் அம்மாவும் திடீர்ன்னு முடிவு எடுத்து என்கிட்டே சொன்னாங்க...! எனக்கே இது ஆச்சர்யம் தான்... என்னை தனியா எங்கேயும் விடமாட்டாங்க... சிங்கப்பூர்க்குப் போக எப்படி அலவ் பண்றாங்கன்னு தெரியலை...''

''நீ கேட்கலையா...?''

''கேட்டேன்...! நான் ஆஸ்திரேலியா டென்னிஸ் ஓப்பன் பட்டத்தை ஜெயிக்கனும்ன்னா சிங்கப்பூர்ல ராபர்ட்ஸன் கிட்டே கோச்சிங் எடுத்தாத்தான் முடியுமாம்...''

''என்னால நம்ப முடியலை... உன்னோட அம்மாவும் அப்பாவும் உன்னை சிங்கப்பூர்க்கு அவசர அவசரமா அனுப்பறாங்கன்னா அதுக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கு...''

''எனக்கும் அது தெரியுது கண்ணன்... ஆனா, என்னான்னு புரியலையே...?''

''உனக்கு ஏதாவது ரகசியமா கல்யாணத்தைப் பண்ணி வைக்க ஏற்பாடு பண்றாங்களோ?''

''சேச்சே...! என்னோட அம்மாவும் அப்பாவும் அப்பேர்ப்பட்டவங்க கிடையாது. எனக்கு க்ராண்ட் ஸ்லாம் பட்டம் கிடைச்ச பின்னாடிதான் கல்யாணம்ன்னு தீர்மானமாய் சொல்லியிருக்காங்க...''

''சரி... நான் இப்ப கேட்கிற கேள்விகளுக்கு கொஞ்சம் யோசனை பண்ணி பதில் சொல்லு. காலையில் நீ டி.வி. பேட்டிக்காக வீட்டை விட்டு வெளியே போனபோது அவங்க இருந்த மனநிலைமைக்கும், நீ டி.வி.ஸ்டேஷனிலிருந்து திரும்பும்போது இருந்த மனநிலைமைக்கும் ஏதாவது வேறுபாடு இருந்ததா?''

குந்தவை சில விநாடிகள் யோசித்து விட்டு பின் ''எஸ்'' என்றாள்.

''என்ன வேறுபாடு...?''

''காலையில் நான் வீட்டை விட்டு புறப்படும்போது அம்மாவும் அப்பாவும் சந்தோஷமான மனநிலையில் இருந்தாங்க. திரும்பவும் வீட்டுக்குப் போகும்போது வீட்டில் டாக்டர் பாரிஜாதமும், கேரளாவிலிருந்து வந்திருந்த அவரோட குடும்ப நண்பர் இராமன் நாயரும், நரு நடுத்தர



வயதுப் பெண்ணும் அப்பா அம்மாவோடு உட்கார்ந்து வரவேற்பறையில் பேசிக்கிட்டு இருந்தாங்க. அவங்களை என்னோட அப்பா அறிமுகப்படுத்தி வெச்சார். கேரளாவில் ஏதோ கல்ச்சுரல் ப்ரோக்ராம் நடக்குதாம். அதுக்கு என்னை சீஃப் கெஸ்டா அழைக்கிறதுக்காக இராமன் நாயரைக் கூட்டிக்கிட்டு டாக்டர் பாரிஜாதம் வந்து இருந்தாங்க... நான் அது மாதிரியான விழாக்களில் கலந்துக்கிறது இல்லைன்னு சொல்லிட்டு ரெஸ்ட் எடுக்கறதுக்காக மாடியறைக்குப் போயிட்டேன். அதுக்கப்புறம் கொஞ்ச நேரத்துல அப்பாவும், அம்மாவும் என்னைப் பார்க்கிறதுக்காக மாடியறைக்கு வந்தாங்க. அப்ப அவங்க ரெண்டு பேரோட முகங்களும் இறுக்கமாய் இருந்தது. காலையில் பார்த்த சந்தோஷம் அவங்களோட முகங்களில் இல்லை. அப்பத்தான் சிங்கப்பூர் போறதைப் பத்தி பேசிக்கிட்டாங்க...''

''கேரளாவிலிருந்து வந்தவரோட பேர் என்னான்னு சொன்னே...?''

''இராமன் நாயர்...''

''அவரோட வந்த லேடி யாரு...?''

''பேரு... சுந்தரவள்ளி. டாக்டர் பாரிஜாதத்தோட நர்ஸிங்ஹோமில் அந்த அம்மா நர்ஸாய் வேலை பார்த்து இருக்காங்களாம்...''

''பாரிஜாதம் உங்க ஃபேமிலி டாக்டரா...?''

''ஃபேமிலி டாக்டர் கிடையாது. ஆனா இருபது வருஷங்களுக்கு முன்னாடி அந்த டாக்டர் அம்மாவுக்கு பிரசவம் பார்த்திருக் காங்க...''

''அதாவது நீ பிறந்தபோது...?''

''ஆமா...''

''அந்த டாக்டர் பாரிஜாதம் இதுக்கு முன்னாடி எப்பவாவது உன்னோட வீட்டுக்கு வந்து இருக்காங்களா....?''

''இல்லை...''

''இருபது வருஷத்துக்குப்புறம் இன்னிக்குத்தான் முதல் தடவையா வந்து இருக்காங்க இல்லையா...?''

''ஆமா...''

''அந்த இராமன் நாயரோட அட்ரஸ் உனக்குத் தெரியுமா... குந்தவை...?''

''தெரியாது...''

''உனக்கு ஆட்சேபனை இல்லைன்னா நான் ஒரு வேலை செய்யட்டுமா...?''

''என்ன...?''

''அந்த டாக்டரம்மா பாரிஜாதத்தை உளவு பார்க்கட்டுமா...?''

''எதுக்காக உளவு பார்க்கணும்...?''

''உன்னோட அப்பாவும், அம்மாவும் உன்னை உடனடியா சிங்கப்பூர் புறப்பட்டு போகச் சொல்றதுக்கு காரணம் என்னாங் கிறதை கண்டுபிடிச்சுடலாமே...''



''எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு கண்ணன்...''

''இதோ பார் குந்தவை...! நீ மனசைப் போட்டு குழப்பிக்க வேண்டாம். நீ உன் பாட்டுக்கு சிங்கப்பூர் புறப்பட்டுப் போ. ப்ராக்டீஸ் பண்ணு. நான் இங்கே நடக்கிற விஷயங்களை வேவு பார்த்து அனுப்பி வைக்கிறேன்...''

''அதெல்லாம் வேண்டாம் கண்ணன்...''

''ஏன் வேண்டாங்கிறே...?''

''என்னோட அம்மாவும் அப்பாவும் எனக்கு நல்லதைத்தான் பண்ணுவாங்க.. அவங்களை ஏதோ க்ரிமினல்கள் மாதிரி நீங்க சந்தேகப்படறதை நான் விரும்பலை...''

''குந்தவை! நான் என்ன சொல் றேன்னா...''

''வேண்டாம்... கண்ணன்...! நீங்க உங்க கிராமத்துக்கு போய் உங்க அப்பாவை சமாதானப்படுத்துங்க... இந்தப் பிரச்னையை நான் பார்த்துக்கிறேன்...''

''நான் என்னோட அப்பாவை என்னான்னு சொல்லி சமாதானப்படுத்த முடியும்...?''

''நான் சொல்ற மாதிரி சொல்நீங் களா...?''

''சொல்லு...''

''என்னோட பேரைக் குறிப்பிட்டு சொல்லாமே 'அப்பா! நான் ஒரு பொண்ணை

விரும்பிட்டிருக்கேன். அந்தப் பொண்ணை ரெண்டு வருஷத்துக்கு அப்புறம்தான் கல்யாணம் பண்ணிக்க முடியும். அது வரைக்கும் நீங்க என்னோட கல்யாணத்தைப் பத்தி கவலைப்பட வேண்டாம். வேற எந்த ஒரு பொண்ணையும் எனக்கு ஏற்பாடு பண்ண வேண்டாம்'ன்னு சொல்லிடுங்க...''

''அந்தப் பொண்ணு யார்ன்னு கேட்டா?''

''இப்போதைக்கு அந்தப் பொண்ணோட பேரைச் சொன்னால் குழப்பம் ஏற்படும்ன்னு சொல்லிடுங்க...''

''அந்த மனுஷன் கேட்க மாட்டாரே...!''

''இதோ பாருங்க கண்ணன்...! உங்க அப்பாவை இந்த விஷயத்தில் கன்வின்ஸ் பண்றது உங்க பொறுப்பு. இப்ப நீங்க கிளம்புங்க. அதோ... என்னோட கோச் மேத்யூ வந்துட்டிருக்கார். இனி நான் ப்ராக்டீஸை ஆரம்பிக்கணும்...''

நீலவண்ணக் கண்ணன் திரும்பிப் பார்த்தான். தூரத்து கார் பார்க்கிங்கில் தன்னுடைய காரை நிறுத்திவிட்டு மேத்யூ கீழே இறங்கிக் கொண்டிருந்தார். இருபதாண்டு கால டென்னீஸ் விளையாட்டு அவருடைய உடம்பை கட்டுக் கோப்பாய் வைத்து இருந்தது.

''நான் வர்றேன் குந்தவை... ராத்திரி ஒன்பது மணிக்கு மேல் உன்னை செல்லில் காண்டாக்ட் பண்றேன்...'' நீலவண்ணக்



கண்ணன் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு வேகமாய் நகர்ந்தான்.

குந்தவை மேத்யூவை நோக்கிப் போனாள். காரை லாக் செய்துவிட்டு மேத்யூ திரும்பினார்.

''குட்ஈவினிங் அங்கிள்...''

மேத்யூ புன்னகைத்தார். ''குட் ஈவினிங்...! என்னம்மா! நாளைக்கு நீ சிங்கப்பூர் புறப்பட்டு போகப்போறதா அப்பா ஃபோன் பண்ணிச் சொன்னார். ரொம்ப சந்தோஷம். ராபர்ட்ஸன் மாதிரி ஒரு கோச்சை நாம பார்க்க முடியாது. நீ அவர்கிட்டே ஒரு மாசம் பயிற்சி எடுத்துக்கிட்டா போதும். ஆஸ்திரேலியா ஓப்பன் டென்னீஸில் ஃபைனல் வரைக்கும் வரலாம்... ஃபைனலுக்கு ஷரபோவா வந்துட்டா நீ அவளை ஜெயிக்க கஷ்டப்பட வேண்டியிருக்கும். மற்றபடி ஃபைனலுக்கு யார் வந்தாலும் உன்னை ஜெயிக்க முடியாது. ஆஸ்திரேலியா ஓப்பன் டென்னிஸ் பட்டம் உனக்குத்தான்...''

''தேங்க்யூ... அங்கிள்...''

''டி.வி.யில் உன்னோட பேட்டி ரொம்பவும் நல்லாயிருந்தது. எல்லாக் கேள்விகளுக்கும் நல்லா ஆன்ஸர் பண்ணியிருந்தே. எவனோ ஒருத்தன் மட்டும் ஏடாகூடமாய் ஏதோ கேட்டுகிட்டு இருந்தான். பட், அவனையும் நீ நல்லாவே டேக்கிள் பண்ணினே...!''

''என்ன பண்றது அங்கிள்...! சில பே என்னை டென்ஷன் பண்ணனும் என்கி நோக்கத்தோடுதான் கேள்வி கேட்பாங்க.. பப்ளிக்குக்கு வந்துட்டா நாம எல்லாத்தையு ஃபேஸ் பண்ணித்தான் ஆகணும்...''

''சரி...நீ போய் ட்ரஸ் பண்ணிட்டு வாம்மா... ப்ராக்டிஸை ஸ்டார்ட் பண்ணி லாம்...''

''இதோ...! பத்து நிமிஷத்து வந்துடறேன் அங்கிள்...'' குந்தவை சொல்லிக் கொண்டே டென்னீஸ் கோர்ட்டுக்குப் பின்புறமிருந்த ட்ரஸ்ஸிங் அறையை நோக்கிப் போனாள்.

ட்ரஸ்ஸிங் அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட முயன்ற விநாடி –

டென்னீஸ் கிளப் ஊழியர் டேவிட் வேகவேகமாய் வந்தார்.

''மேடம்...! ஒரு நிமிஷம்...!''

குந்தவை நிமிர்ந்தாள்.

''என்ன டேவிட்...?''

''உங்களை அவசரமாய் பார்க்கணும்னு சொல்லி ஒருத்தர் வந்து ரிசப்ஷன் காத்திட்டிருக்கார் மேடம்...''

''யார்ன்னு கேட்டீங்களா...?''

''பேர் எழுதிக் கொடுத்திருக்கா மேடம்...'' சொல்லிக் கொண்டே கையில் வைத்து இருந்த துண்டுச்சீட்டை நீட்டினா



ஊழியர். குந்தவை அதை வாங்கி எழுதியிருந்த பெயரைப் படித்தாள்.

இராமன் நாயர்.

*சியோல் ஒலிம்பிக் போட்டியில் டென்னீஸ் விளையாட்டு நடந்தபோது ஜெர்மனியைச் சேர்ந்த ஸ்டெபிகிராபி வெற்றி பெற்று முதல் தங்கப்பதக்கம் தட்டிச் சென்றார். அதேபோல் 'க்ராண்ட் ஸ்லாம்' பட்டத்தை 5 முறை வென்று 'GOLDEN SLAM' என்ற உயர்ந்த சிறப்பையும் பெற்றார்.*



## 8

குந்தவை ரிசப்ஷனை நோக்கி வேகவேகமாய்ப் போனாள்.

காலையில் வீட்டில் பார்த்த இராமன் நாயர் ரிசப்ஷனில் தனியாய் உட்கார்ந்து மேகஸின் ஒன்றை புரட்டிக் கொண்டிருந்தார். குந்தவையைப் பார்த்ததும் எழுந்தார்.

''ஸாரிம்மா...! தொந்தரவு தர்றேன்னு நினைக்க வேண்டாம்...''

''பரவாயில்லை...! என்ன விஷயம்னு சொல்லுங்க...''

''உன்கிட்டே கொஞ்சம் தனியா பேசணும்மா...''

''இப்ப நாம தனியாத்தானே இருக்கோம்...''

''இங்கே பேச வேண்டாம்ன்ஜ
பார்க்கிறேன். ஒரு அரை மணி நேர
வெளியே போய்ட்டு வரலாமாம்மா...?''

குந்தவை முகம் சிவந்தாள்.

''என்னது...! வெளியே போறதா...
உங்க மனசுல நீங்க என்ன நினைச்சுட்டு
இருக்கீங்க...? காலையில் டாக்டர் பாரிஜாத
தோடு வீட்டுக்கு வந்தீங்க. கேரளாவில் ஏதே
கல்ச்சுரல் ப்ரோக்ராம் இருக்கு. சீஃப்
கெஸ்ட்டா கலந்துக்க முடியுமான்னு
கேட்டீங்க. என்னால கலந்துக்க இயலாதுன்னு
சொன்னேன். அதோடு விஷயம் முடிஞ்
சுட்டுதுன்னு நினைச்சுட்டிருந்தா மறுபடியும்
இங்கே வந்து தொந்தரவு தர்றீங்க...
என்கிட்டே நீங்க என்ன பேசணுமோ அதை
இங்கேயே பேசிட்டு போங்க...''

''அ...அ...அது வந்தும்மா...'' என்று
சொல்லி இராமன் நாயர் சுற்றும் முற்றும்
பார்த்துக் கொண்டு இருக்கும்போதே
குந்தவையின் கையில் இருந்த செல்போன்
உயிர் பெற்று ரிங்டோனை வெளியிட்டது.
டிஸ்ப்ளேயில் யார் என்று பார்த்தாள்.

அப்பா அனந்தநாராயணன்.

செல்போனை காதுக்கு கொடுத்தாள்.

''அப்பா...!''

''என்னம்மா... ப்ராக்டீஸ் பண்ணிட்
டிருக்கியா...?''



''இல்லேப்பா... இனிமேத்தான் ஆரம்பிக்கணும்... என்ன விஷயம்...?''

''சிங்கப்பூரிலிருந்து கோச் ராபர்ட்ஸன் ஃபோன் பண்ணியிருந்தார். உன்னோட ஜர்னி ஷெட்யூலைக் கேட்டார். சொல்லிட்டேன். ஒரு மணி நேரம் கழிச்சு உன்கிட்டே பேசறேன்னு சொன்னார். நீ இன்னிக்கு ப்ராக்டீஸைக் கொஞ்சம் சீக்கிரமாவே முடிச்சுக்கிட்டு வந்துடும்மா... லேட் பண்ணிடாதே...!''

''அப்பா...! நான் உடனே புறப்பட்டு வீட்டுக்கு வர்றேன்...! இன்னிக்கு எனக்கு ப்ராக்டீஸ் பண்ற மூடே போயிடுச்சு...''

''ஏம்மா...?''

''அந்த இராமன் நாயர் இங்கேயும் வந்துட்டார்...''

''எ...எ...என்னது...? காலையில் நம்ம வீட்டுக்கு வந்த இராமன் நாயரா...?''

''ஆமாம்ப்பா...! இப்ப என் முன்னாடி தான் நின்னுட்டிருக்கார். என்கிட்டே ஏதோ தனியா பேசணுமாம். அரைமணி நேரம் வெளியே போய்ட்டு வரலாம் வான்னு கூப்பிடறார்...! என்னப்பா இதெல்லாம்...?''

''அந்த இராமன் நாயர்கிட்டே உன்னோட செல்போனைக் குடு...''

''வேண்டாம்பா... அவர்கிட்டே நானே பேசிக்கறேன்...''

"இல்லேம்மா... நீ எதுவும் அவர்கிட்டே பேசாதே... நான் பேசிக்கறேன். அவர்கிட்டே செல்போனைக் கொடு சொல்கிறேன்..."

குந்தவை பெருமூச்சொன்றை வெளியேற்றிவிட்டு தன் கையிலிருந்த செல்போனை இராமன் நாயரிடம் நீட்டினாள்.

"அப்பா உங்ககிட்டே பேசணுமாம்..."

செல்போனை தயக்கமாய் வாங்கி காதில் வைத்தார் இராமன் நாயர். மெல்ல குரல் கொடுத்தார். "ஹலோ..."

மறுமுனையில் அனந்தநாராயணன் இரைந்தார்.

"இராமன் நாயர்... உங்ககிட்டே நான் என்ன சொன்னேன்?"

"அது... வந்து..."

"என்னோட பொண்ணுக்கு எந்த விஷயமும் தெரியக் கூடாது...! அவளுக்குத் தெரியாமே விஷயத்தை பேசி முடிச்சக்கலாம்ன்னு சொன்னேனா... இல்லையா...?"

"ஆமா... சொன்னீங்க...!"

"இப்ப எதுக்காக என் பொண்ணைப் பார்க்க டென்னீஸ் கிளப்புக்குப் போனீங்க...?"

"பார்த்து பேசணும் போல் இருந்தது..."

"என்ன... சென்டிமென்டா...? இதோ பாருங்க... இராமன் நாயர்...! எம் பொண்ணு



குந்தவை விஷயத்துல நாம பேசி ஒரு முடிவு எடுக்கற வரைக்கும் நீங்க அவளை சந்திச்சு பேசக்கூடாது... அவகிட்டே எதையும் பேசக் கூடாது...! நான் டாக்டர் முகத்துக்காக பார்க்கிறேன். இல்லேன்னா நடக்கிறதே வேற..."

"ஸாரி... மிஸ்டர் அனந்தநாராயணன்..."

"என்ன ஸாரி...! உடனே அந்த இடத்தைவிட்டு கௌம்புங்க... எம் பொண்ணுகிட்டே செல்போனைக் குடுங்க..."

ராமன் நாயர் செல்போனை குந்தவையிடம் கொடுத்துவிட்டு, "ஸாரிம்மா... நான் வர்றேன்...உன்னை இந்த இடத்துல பார்க்க வந்தது அப்பாவுக்குப் பிடிக்கலை போலிருக்கு..." சொல்லிவிட்டு வேக வேகமாய் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

குந்தவை மறுபடியும் செல்போனை காதுக்கு ஒற்றினாள். படபடப்பாய் கேட்டாள்.

"என்னப்பா இதெல்லாம்...?"

"கோபப்படாதேம்மா...! கேரளாவில் அவர் நடத்தற கல்ச்சுரல் ப்ரோக்ராமுக்கு உன்னை எப்படியாவது கூட்டிட்டுப் போயிடணும்ன்னு அவர் நினைக்கிறார். அதான் உன்னை தனியாய் பார்த்து பேச ஆசைப்பட்டிருக்கார். எல்லாம் ஒரு ஆர்வக்கோளாறுதான்...!"

"அப்பா...! அந்த ஆளைப் பார்த்தா கல்ச்சுரல் ப்ரோக்ராம் நடத்தற ஆள் மாதிரி

தெரியலை. டாக்டர் பாரிஜாதத்து கிட்டே சொல்லி அவரை எச்சரிக்கையா இருக்க சொல்லுங்க...''

''நான் சொல்லிடறேம்மா...! ப்ராக்டீஸை முடிச்சுக்கிட்டு சீக்கிரம வீட்டுக்கு வந்துடு...''

''அப்பா! நான் இன்னிக்கு ப்ராக்டீஸ் பண்ணலை. வீட்டுக்கு வந்துடறேன். ராமன் நாயர் வந்து மூடையே கெடுத்துட்டார்...'' சொல்லிவிட்டு செல்போனை கோபமாய் அணைத்தாள்.

> *டென்னீஸ் கோர்ட்டின் நீள அகலம் எவ்வளவு அடிகளில் இருக்க வேண்டும் தெரியுமா?*
>
> *அகலம் 36 அடி. நீளம் 78 அடி.*



## 9

அந்த வாரத்தின் முன்பாதி நாட்கள் கரைந்து போயிருக்க, அன்று மாலை ஆறரை மணியளவில் அனந்தநாராயணனும் புனிதா வும் கெஸ்ட்ஹவுஸ் லானில் உட்கார்ந்து கவலையோடு பேசிக் கொண்டிருந்தார்கள். புனிதாவின் முகம் மன உளைச்சல் காரணமாய் ஒடுங்கிப் போயிருந்தது.

''என்னங்க...! நம்ம பொண்ணு சிங்கப்பூர் போயிட்டா. இன்னும் ரெண்டு நாள்ல அந்த



இராமன் நாயரும், தங்கம்மாவும் டாக்டரைக் கூட்டிட்டு வந்துடுவாங்க. நீங்க என்ன பதிலைச் சொல்லப் போறீங்க...?''

''எனக்கு ஒண்ணும் புரியலை புனிதா...! குந்தவை நம்ம பொண்ணு கிடையாதுங் கிறதுக்கு சரியான ஆதாரம் தங்கம்மாவோட உருவ ஒற்றுமை. ரெண்டாவது ஆதாரம் டாக்டர் பாரிஜாதம். மூணாவது ஆதாரம் அந்த நர்ஸ் சுந்தரவள்ளி. இந்த விவகாரத்தை நாம போலீஸுக்கு கொண்டு போனாலும் சரி, கோர்ட்டுக்கு கொண்டு போனாலும் சரி, குந்தவையை நாம இழந்துடுவோம்...''

புனிதா அழுகையில் வெடித்தாள். ''வேண்டாங்க... அந்த வார்த்யை மட்டும் சொல்லாதீங்க... குந்தவையை அவங்களுக்கு கொடுத்துட்டு என்னால உயிரோடு இருக்க முடியாது. குந்தவை கடைசி வரைக்கும் நம்ம பொண்ணாய்த்தான் இருக்கணும்..''

''எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா என்ன? அதுக்கு என்ன பண்ணலாம் சொல்லு.''

''அவங்களை கன்வின்ஸ் பண்ண என்கிட்டே ஒரு ப்ளான் இருக்கு...''

''என்ன ப்ளான்?'' கேட்டுக் கொண்டு இருக்கும்போதே அந்த க்வாலிஷ் கார் திறந்திருந்த காம்பௌண்ட் கேட் வழியாக உள்ளே நுழைந்து போர்டிகோவை நோக்கி வந்தது.

அனந்தநாராயணனின் முகம் உடனே மாறியது. ''வர்றது... அவங்கதான் போலிருக்கே...?''

''ஒரு வாரம் கழிச்சுத்தானே அவங்களை வரச் சொன்னீங்க?''

''ஆமா...''

''அதுக்கு முன்னாடியே வர்றாங் களே...?''

''புனிதா...! நீ எதுவும் பேசாதே... அவங் வரட்டும். நான் பேசிக்கிறேன். இந் விஷயத்துல கோபப்பட்டா காரிய கெட்டுடும்...''

அனந்தநாராயணன் சொல்லிக் கொண்டே போர்டிகோவை நோக்கிப் போனார் காரிலிருந்து வரிசையாய் ராமன் நாய தங்கம்மா, டாக்டர் பாரிஜாதம், நர் சுந்தரவள்ளி இறங்கினார்கள். டாக்டரி முகம் மட்டும் இயல்பாய் இருக்க மற்றவர்களின் முகங்கள் இறுகிப் போயிற்

பாரிஜாதத்தை நெருங்கினார் அனந் நாராயணன்.

''என்ன டாக்டர்...! நான் சொன் டேட்டுக்கு முன்னாடியே வந்துட்டீங்க...?

''குந்தவை வீட்டில் இருந்தாத்தானே பிரச்னை? அவளைத்தான் சிங்கப்பூருக் அனுப்பிட்டீங்களே...?''

''அதுக்காக முன்கூட்டியே வந்துடறதா?



தங்கம்மா ஆவேசமாய் முன்வந்தாள். ''சொத்தை பறிகொடுத்தவங்க நாங்க! எங்களால பொறுமையா காத்துகிட்டு இருக்க முடியாது. இன்னிக்கு எங்களுக்கு முடிவு தெரிஞ்சாகணும்...! விவகாரம் முடியாமே குந்தவையை சிங்கப்பூர்க்கு அனுப்பி வெச்சது பெரிய தப்பு. எங்களை கேட்காமே அவளை எப்படி சிங்கப்பூர்க்கு அனுப்ப லாம்...?''

''இப்ப நீங்க தகராறு பண்ண வந்தீங்களா... இல்லை விவகாரத்தை சுமுகமாக பேசி முடிவு பண்ண வந்தீங் களா...?''

''எங்களுக்கு சுமுகமான முடிவுதான் வேணும்...''

''அப்ப...வாங்க உள்ளே போகலாம்...''

''வீட்ல வேலைக்காரங்க இல்லையா...?''

''இல்லை! ஆறு மணிக்கு மேல் அவங்க வீட்டுக்குப் போயிடுவாங்க... நாளைக்குக் காலையில்தான் வேலைக்கு வருவாங்க...''

''வசதியாய்ப் போச்சு...''

எல்லோரும் உள்ளே போனார்கள். அனந்தநாராயணன் கதவை மூடிவிட்டு வர சோபாக்களில் அனைவரும் சாய்ந்தார்கள்.

சில விநாடிகள் வேண்டாத நிசப்தத்தில் கரைந்த பிறகு டாக்டர் பாரிஜாதம் பேச்சை ஆரம்பித்தார்.

''மிஸ்டர் அனந்தநாராயணன்! குந்தவை
விஷயமாய் நீங்க என்ன முடி
பண்ணியிருக்கீங்க...?''

''குந்தவை அவங்க பெண்ணா
இருக்கலாம். பட், இருபது வருஷம
அவளை நாங்கதான் வளர்த்தோம். இன்னிக்
நாடே போற்றுகிற மாதிரியான ஒ
நிலைமைக்கு கொண்டு வந்து இருக்கோ
அதைப் பார்த்து பெத்தவங்க அவங்
சந்தோஷப்படணுமே தவிர, இப்படியொ
பிரச்னையை கிளப்பிக்கிட்டு வரக்கூடாது...

ராமன் நாயர் கேலியாய் புன்னகைத்தா

''என்னது...! நீங்க குத்தவை
வளர்த்தது பார்த்து நாங்க சந்தோஷ
படணுமா...? சரி... சந்தோஷ
பட்டுட்டோம்... குந்தவையை உட
எங்ககூட அனுப்பி வையுங்க...''

அனந்தநாராயணன் டாக்டரிட
திரும்பினார். ''இப்படி பேசினா எப்ப
டாக்டர்...?''

அதுவரைக்கும் ஒன்றும் பேசாம
இருந்த நர்ஸ் சுந்தரவள்ளி திடீரென்
கோபாவேசமாகி கத்தினாள்.

''பின்னே எப்படி பேசச் சொல்றீங்க...
பொருளைப் பறிகொடுத்தவங்க பதறிப்போ
வந்து இருக்காங்க... உங்களுக்
உண்மையிலேயே மனசாட்சி இருந்திருந்
அவங்க கேட்ட அன்னிக்கே குந்தவை



அவங்ககூட அனுப்பியிருக்கணும். அதை விட்டுட்டு இப்படி திருட்டுத்தனமாய் அவளை சிங்கப்பூர்க்கு அனுப்பியிருக்கக் கூடாது...''

நர்ஸ் சுந்தரவள்ளி இப்படிப் பேசியதும் அனந்தநாராயணனின் கோபம் தலைக்கேறியது. தன்னுடைய இடது கை ஆட்காட்டி விரலை உயர்த்தினார். ''இதோ பார்...! நாங்க பேசிக்கிட்டு இருக்கும்போது நீ வாயை மூடிக்கிட்டு இருக்கணும்... ஏதாவது பேசினே, கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிடுவேன்...''

''என்னது...! கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளுவியா...? எங்கே தள்ளு பார்க்கலாம்...! நீ ஒரு புதுப் பணக்காரன். உன்னோட புத்தி பின்னே எப்படி போகும்...? என் மேல கை வைச்சு பார்ரா...''

நர்ஸ் சுந்தரவள்ளி கைகளை விரித்துக் கொண்டு ஆக்ரோஷமாய்க் கத்த –

அனந்தநாராயணன் அவள் மேல் குபீரென்று பாய்ந்து வலது கையால் அவளுடைய கழுத்தை அசுரத்தனமாய்ப் பற்றினார். அவள் திமிற –

''போடி கழுதை...!'' வாசலை நோக்கி நெட்டித் தள்ளினார்.

சுந்தரவள்ளி நிலைகுலைந்து போய் கிட்டத்தட்ட பறந்து போய் கனமான ஈட்டிமரக்

கதவின் மேல் மோதிக் கொண்டு கீழே விழுந்தாள்.

இரண்டு கைகளையும் விரித்துக் கொண்டு ஸ்லோமோஷனில் மல்லாந்தாள். நெற்றி உடைபட்டு புருவ மத்தியை பாதையாய் மாற்றிக் கொண்டு ரத்தம் வழிந்தது.

டென்னிஸ் விளையாடும்போது டென்னிஸ் கோர்ட்டின் குறுக்கே கட்டப் பட்ட இருக்கும் நெட் (NET) டின் உயரம் எவ்வளவு? 3 அடி உயரம்.



# 10

நர்ஸ் சுந்தரவள்ளியின் உடல் அருகே போய் பதைபதைப்போடு குனிந்து அவளுக்கு முதல் உதவி செய்ய முயன்ற டாக்டர் பாரிஜாதத்தின் முகம் இருண்டது. அனந்தநாராயணனை நோக்கி நிமிர்ந்தாள்.

''இப்படியா மூர்க்கத்தமாய் நடந்து கிறது? சுந்தரவள்ளியை உடனே ஹாஸ் பிடலைஸ் பண்ணியாகணும். பல்ஸ்ரேட் குறைஞ்சுக்கிட்டே போகுது... இப்படியே விட்டா செத்துடுவா...! ராமன் நாயர்!''

''டாக்டர்...'' நாயர் ஓடி வந்தார்.

''சுந்தரவள்ளியை நம்ம கார்க்கு கொண்டு போங்க...! சீக்கிரம்...! தாமதிக்கி ஒவ்வொரு நிமிஷமும் அவளோட உயிருக்கு ஆபத்து...''



ராமன் நாயர் கீழே கிடந்த சுந்தர வள்ளியை இரண்டு கைகளாலும் அப்படியே தூக்கிக் கொண்டு போய் க்வாலிஷ் காரின் பின் சீட்டில் போட்டார். பாரிஜாதமும் தங்கம்மாவும் ஓடிப் போய் ஏறிக் கொண்டார்கள்.

க்வாலிஷ் புயல் வேகத்தில் புறப்பட்டுப் போக, திகைத்துப் போய் நின்றிருந்த அனந்தநாராயணனின் தோளை நடுக்கமாய்த் தொட்டாள் புனிதா. ''என்னங்க... இது...! என்னைக் கோபப்படாதேன்னு சொல்லிட்டு நீங்க இப்படி பண்ணிட்டீங்க...?''

''அவ ஒரு நர்ஸ்...! என்னை எவ்வளவு மரியாதைக்குறைவா பேசினா பார்த்தியா...?''

''அதுக்காக... இப்படியா பிடிச்சு தள்ளி விடறது...? அவ செத்துட்டா... பிரச்னை இன்னும் பெரிசாயிடுமே...?''

''ஹாஸ்பிடலுக்குப் போய்ப் பார்க்கலாமா...?''

''மொதல்ல கிளம்புங்க...'' இருவரும் வீட்டைப் பூட்டிக்கொண்டு போர்டிகோவில் நின்றிருந்த தங்களுடைய காரை நோக்கி ஓடினார்கள். கார்க்குள் ஏறி உட்கார்ந்தபோது அனந்தநாராயணனின் செல்போன் விழித்துக் கொண்டு குரல் கொடுத்தது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தார்.

சிங்கப்பூரிலிருந்து குந்தவை.

பதட்டமாய் பேசினார்.

''ஹ...ஹலோ...''

''அப்பா...''

''எப்படி இருக்கேம்மா...?''

''ஃபைன்...!''

''ப்ராக்டீஸ் எப்படி போயிட்டிருக்கு...?''

''பிரமாதமாய் இருக்கப்பா...! கோச் ராபர்ட்ஸன் எக்ஸலண்ட்டா கோச்சிங் தர்றார்... இந்த நாலைஞ்சு நாளிலேயே நிறைய கத்துக்கிட்டேன்... அதிலும் சர்வீஸ் போடறதுல நிறைய விஷயம் இருக்கப்பா... இந்த வருஷம் எப்படியும் ஆஸ்திரேலியா ஓப்பன் டென்னீஸ் பட்டத்தை வாங்கிடு வேன்...''

''...''

''அப்பா...! என்ன பேச்சையே காணோம்?''

''நீ சொன்னதைக் கேட்டு சந்தோஷப் பட்டுக்கிட்டு இருக்கேன்மா. உங்கம்மா பக்கத்துலதான் இருக்கா. பேசறியா...?''

''குடுங்கப்பா...''

அனந்தநாராயணன் புனிதாவின் கையில் செல்போனைக் கொடுத்துவிட்டு காரைக் கிளப்பினார். புனிதா பேசினாள்.

''குந்தவை...! சாப்பிட்டியா...?''



''ஏம்மா...! உனக்கு எப்பவுமே சாப்பாட்டு பிரச்னைதானா? கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் சிங்கப்பூர் நயார்ஸன் ஹோட்டலுக்குப் போய் ஒரு அருமையான டின்னரை முடிச்சுக்கிட்டு வந்தேன். நீ எப்படிம்மா இருக்கே...?''

''நீ இங்கே இல்லாமே எனக்கு எதுவுமே பிடிக்கலை...''

''அப்படின்னா... நீயும் அப்பாவும் நாளைக்கே புறப்பட்டு சிங்கப்பூர் வந்துடுங்க. எனக்கும் 'ஹோம் சிக்' இல்லாமே இருக்கும். என்ன... வந்துடறீங்களா...?''

''அப்பாவுக்கு இங்கே கொஞ்சம் டாக்குமெண்ட்டேஷன் ஒர்க் பாக்கி இருக்கு குந்தவை. ஐ.டி. வேற ஃபைல் பண்ண ணும்...'' புனிதா பேசப்பேச, ''அம்மா...'' என்று குறுக்கிட்டாள் குந்தவை.

''என்ன...?''

''உனக்கு உடம்பு சரியில்லையா...?''

''ஏன் அப்படிக் கேட்கிறே?''

''இல்ல... நீ பேசும்போது குரல்ல ஒரு நடுக்கம் தெரியுது...! அதாவது உன்னோட பேச்சு எப்பவும் பேசற மாதிரி இல்லை. உடம்புக்கு ஏதாவது முடியலைன்னா டாக்டர்கிட்டே போய்ட்டு வந்துடம்மா...''

''என்னோட உடம்புக்கு ஒன்னுமில்லை குந்தவை. நீ உன்னை நல்லபடியா பார்த்துக்க...! அப்பாவுக்கு இங்கே

வேலைகள் முடிஞ்சதும் நானும் அவரம் உடனடியா சிங்கப்பூர் புறப்பட்டு வந்துடறோம்...''

''நிஜமா...?''

''கண்டிப்பா...''

''ஓ.கே. குட்நைட்...! நாளைக்கு காத்தால ஏழு மணிக்கு டென்னீஸ் கோர்ட்டுக்கு போகும்போது பேசறேன்...''

குந்தவை மறுமுனையில் செல்போனை அணைத்துவிட புனிதாவும் செல்போனை அணைத்தாள். கார் வேகமாய் ஹாஸ்பிடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. காரை ஓட்டிக் கொண்டிருந்த அனந்தநாராயணனின் தோளைத் தொட்டாள்.

''என்னங்க...?''

''ம்...''

''அந்த நர்ஸ் சுந்தரவள்ளிக்கு எதுவும் ஆயிடாதே...!''

''ஒண்ணும் ஆகாது... தைரியமாயிரு!''

''ஏதாவது ஆயிட்டா என்னங்க பண்றது?''

''புனிதா! நான் ஏற்கெனவே குழப்பத்திலும் பயத்திலும் இருக்கேன். கொஞ்ச நேரம் பேசாமே வர்றியா...?''

புனிதா மௌனமானாள்.

ஹாஸ்பிடலை நோக்கி கார் புயல் வேகத்தில் பறந்தது.



அமெரிக்காவின் முதல் டென்னீஸ் ப்ளேயர் ஜிம் கூரியர். இவர் 1992ஆம் ஆண்டு முதல் தடவையாய் விளையாட வந்தார். இவர்க்குப் பின் விளையாட வந்த அமெரிக்காவின் ஜான் மெக்கன் ரோ டென்னீஸ் விளையாட்டின் தர வரிசையில் நம்பர் 1 ஆக இருந்தார்.



## 11

பாரிஜாதம் நர்ஸிங்ஹோம்.

ஐ.ஸி. யூனிட்டுக்குள் இருந்து வெளிப்பட்ட டாக்டர் பாரிஜாதத்தை இராமன் நாயரும், தங்கம்மாவும் நெருங்கினார்கள். இராமன் நாயர் கேட்டார்.

''டாக்டர்...! ஹௌ ஈஸ் சுந்தரவள்ளி?''

பாரிஜாதம் புன்னகைத்தாள்.

''சரியான நேரத்துக்கு கொண்டு வந்து ட்ரீட்மெண்ட் கொடுத்ததில் பல்ஸ் ரேட் நார்மலுக்கு வந்துடுச்சு. இனி உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லை. ஒரு மணி நேரத்துக்குள்ளே அவளுக்கு கான்ஷியஸ் வந்துடும்...''

''ஈஸிட்...?''

''எஸ்...'' என்ற டாக்டர், இராமன் நாயரின் முகத்தைப் பார்த்துவிட்டு புருவங்களை உயர்த்தினாள்.

''என்ன நாயர்...! சுந்தரவள்ளியோட உயிர்க்கு ஆபத்து இல்லைன்னு சொல்றேன். முகத்துல கொஞ்சம்கூட சந்தோஷத்தைக் காணோம்...''

''சந்தோஷப்பட முடியலை டாக்டர்...''

''என்ன சொல்றீங்க...?''

''உங்க ரூமுக்குப் போய்ப் பேசலாமா?''

''என்ன பேசப் போறீங்க...?''

''வாங்க... டாக்டர் சொல்றேன்!''

பாரிஜாதம் குழப்பமாய் தன்னுடைய அறையை நோக்கி நடக்க இராமன் நாயரும், தங்கம்மாவும் தொடர்ந்தார்கள். அறைக்குள் நுழைந்ததும் இராமன் நாயர் கதவைச் சாத்திவிட்டு மெல்லிய குரலில் பேச்சை ஆரம்பித்தார்.

''டாக்டர்...! அனந்தநாராயணனும் அவரோட மனைவி புனிதாவும் இந்நேரம் சுந்தரவள்ளிக்கு என்னாச்சோன்னு கதி கலங்கிப் போயிருப்பாங்க இல்லையா...?''

''கண்டிப்பாய்...''

''அதை நாம உபயோகப்படுத்திக்க வேண்டாமா...?''

''உபயோகப்படுத்திக்கிறதா... எப்படி...?''

''டாக்டர்...! குந்தவை விஷயத்துல அனந்தநாராயணனும் சரி, அவரோட



மனைவியும் சரி, நமக்கு பயப்பட்டு பேசற மாதிரியே இல்லை. ரொம்பவும் தைரியமாய் குந்தவை எங்க மகள்தான்னு பேசறாங்க... அந்த தைரியத்தை நாம சிதைக்கணும்...''

''எ...ப்...ப...டி...?''

''நர்ஸ் சுந்தரவள்ளியை மூர்க்கமா தள்ளிவிட்டது அனந்தநாராய்ணன். சுந்தர வள்ளி இப்போ அதிர்ஷ்டவசமாய் உயிர் பிழைச்சுட்டா... ஒருவேளை அவள் இறந்து போயிருந்தா அது ஒரு கொலை மாதிரிதானே?''

''ஆமா...''

''அப்போ கொலையாளி யாரு?''

''அனந்தநாராயணன்...''

''அவரைக் கொலையாளியாக்கிட்டா என்ன...?''

''நாயர்! நீங்க என்ன சொல்றீங்க...? சுந்தரவள்ளிதான் உயிர் பிழைச்சுட்டாளே?''

''அந்த உயிரை எடுத்துட்டா தீர்ந்தது...''

''நா...ய...ர்...!'' பாரிஜாதத்தின் விழிகள் அப்படியே நிலைத்தன.

''என்ன டாக்ர்... அப்படி பார்க்கறீங்க...? சுந்தரவள்ளி இப்போ உயிரோடு இருக்கிற விஷயம் நம்ம மூணு பேர்க்கு மட்டும்தான் தெரியும். வெளியே வேற யார்க்கும் தெரியாது. சுந்தரவள்ளிக்கு நினைவு

திரும்பறதுக்கு முந்தி ஒரு ஊசியைப் போட்டு அவளோட கதையை முடிங்க டாக்டர். அதே கையோடு அனந்தநாராயணனுக்கு ஃபோன் பண்ணி சுந்தரவள்ளி இறந் துட்டார்ன்னு சொல்லுங்க... புருஷன், பெஞ்சாதி ரெண்டு பேரும் தலை தெறிக்க உங்ககிட்டே ஓடி வருவாங்க. காலில் விழாத குறையாய் இந்த விஷயத்தை வெளியே சொல்லாதீங்கன்னு கெஞ்சுவாங்க... அந்த சமயத்துல நாம என்ன பேசினாலும் அதுக்கு எதிர்ப்பேச்சு பேச மாட்டாங்க...''

பாரிஜாதம் யோசனையாய் நெற்றியைத் தேய்த்தாள். தங்கம்மா படபடத்தாள்.

''டாக்டர்...! என்னோட கணவர் சொல்றதுதான் சரி; குந்தவை விஷயத்தில் நமக்கு வெற்றி கிடைக்கணும்ன்னா அனந்தநாராயணனையும், புனிதாவையும் நம்ம கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டு வரணும். அதுக்கு ஒரே வழி! சுந்தர வள்ளியோட கதையை முடிக்க வேண்டியது தான். அவளுக்கு கொடுக்க வேண்டிய பங்கும் பணமும் நமக்கு மிச்சமாகும்...''

பாரிஜாதம் பெருமூச்சு விட்டாள். ''நீங்க ரெண்டு பேரும் சொல்றது சரிதான்...! இருந்தாலும் நான் ஒரு டாக்டர். ஒரு பேஷண்ட்டோட உயிரைக் காப்பாற்றித்தான் எனக்குப் பழக்கம். உயிரை எடுத்து அல்ல...''

ராமன் நாயர் கபடமாய்ப் புன்னகைத்தார்.



''ஓ.கே. டாக்டர்...! அந்த உயிரை எடுக்கற வேலையை நான் பண்றேன். இப்ப ஐ.ஸி.யூனிட்ல யாரும் இருக்க மாட்டாங்க தானே...?''

''நா...ய...ர்...''

''என்ன டாக்டர்...?''

''சுந்தரவள்ளி... நம்ம மூணு பேர்க்கும் உண்மையானவளாய் இருந்திருக்கா. அவ உயிரை எடுக்கிறத சரியான்னு யோசனை பண்ணுங்க...''

''டாக்டர்...! ஒரு திட்டம் வெற்றிகரமாய் முடியணும்ன்னா இது மாதிரியான சின்னச் சின்ன உயிர்த் தியாகங்கள் தேவை. நீங்க உங்க ரூமிலேயே இருங்க டாக்டர். நான் போய் சுந்தரவள்ளியோட மூச்சை நிறுத்திட்டு வர்றேன்...''

''நா...ய...ர்...''

''நோ... சென்டிமென்ட்ஸ் டாக்டர்...'' இராமன் நாயர் அறைக் கதவைத் திறந்து கொண்டு வேகமாய் வெளியேறி ஐ.ஸி. யூனிட்டை நோக்கிப் போனார்.

ஹாஸ்பிடல் மெலிதான இருட்டில் இருந்தது. வராந்தாவில் யாரும் இல்லை. ஒரு நிமிஷ நடை. ஐ.ஸி.யூனிட் வந்தது.

மெல்ல கண்ணாடிக் கதவைத் தள்ளி உள்ளே எட்டிப் பார்த்தார். நான்கைந்து பேபுஷண்ட்டுகள் ஆக்ஸிஜன் சிலிண்டர் களின் உதவியால் கண்கள் மூடிய நிலையில் சுவாசித்துக் கொண்டிருக்க — நர்ஸ் ஒருத்தி

குனிந்த வாக்கில் முதுகைக் காட்டியபடி எதையோ எழுதிக் கொண்டிருந்தாள்.

இராமன் நாயர் பூனை போல் நடந்து சத்தம் காட்டாமல் சுந்தரவள்ளி படுக்க வைக்கப்பட்டிருந்த கேபினுக்குள் நுழைந்தார். கேபினுக்குள் யாரும் இல்லை.

தலையில் பாண்டேஜ் கட்டோடு மயக்க மருந்தின் உதவியோடு வாய் பிளந்து தூங்கிக் கொண்டிருந்த சுந்தரவள்ளியை நெருங்கினார். சுற்றும் முற்றும் ஒரு தடவை பார்த்துக் கொண்டு, பக்கத்தில் இருந்த தலையணையை எடுத்து முகத்தில் வைத்தார்.

ஒரே அழுத்து!

தன்னுடைய எண்பது கிலோ உடம்பு எடை மொத்தத்தையும் வலது கைக்குக் கொடுத்து அழுத்தினார்.

சுந்தரவள்ளியின் உடம்பு ஒரே ஒரு தடவை மட்டும் திமிறி எதிர்ப்பு காட்டிவிட்டு பின் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கியது.

டென்னிஸ் விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் கிரிக்கெட் வீரர்களுக்கு இருப்பது போன்ற சலுகைகள் எதுவும் கிடையாது. விமான டிக்கெட், ஹோட்டலில் தங்குவது, உணவு, மருத்துவ செலவு, கோச்சிங் கட்டணம் இப்படி எல்லாவற்றுக்கும் தங்களுடைய சொந்தப் பணத்தைத் தான் செலவழிக்க வேண்டும்.



அதே போல் போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே கணிசமான தொகையை எதிர்பார்க்க முடியும். இல்லாவிட்டால் ஒரு சர்டிபிகேட்டைக் கொடுத்து அனுப்பி விடுவார்கள்.



## 12

இராமன் நாயர் வியர்த்த முகத்தை கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டு டாக்டர் பாரிஜாதத்தின் அறைக்குள் உழைத்தார்.

பாரிஜாதம் இறுகிய முகத்தோடு உட்கார்ந்திருக்க, தங்கம்மா பதட்டமாய்க் கேட்டாள்.

''என்னாச்சு...?''

''வேலை முடிஞ்சது... சுந்தரவள்ளி இந்த நிமிஷம் உயிரோடு இல்லை... தலையணையை வைச்சு ஒரே அழுத்து...''

பாரிஜாதம் பயமாய் எச்சிலை விழுங்கிக் கொண்டு கேட்டாள். ''யாரும் பார்த்துடலையே?''

''இல்லை...''

''நர்ஸ்...?''

''பயப்படாதீங்க டாக்டர்... அவளுக்குத் தெரியாமல்தான் காரியத்தை முடிச்சேன்...''

தங்கம்மா குறுக்கிட்டு கேட்டாள்.

''சுந்தரவள்ளி செத்துட்டாளா...? சரியா பார்த்தீங்களா...?''

''ம்... பார்த்துட்டுத்தானே வர்றேன்...'' சொன்ன இராமன் நாயர் டாக்டரிட திரும்பினார்.

''டாக்டர்...! நீங்க எதுக்கும் ஐ.ஸி யூனிட்டுக்கு ஃபோன் பண்ணி சுந்த வள்ளியோட க்ண்டிஷன் இப்போ எப்படியிருக்குன்னு கேட்டுப் பாருங்க...''

பாரிஜாதம் தயக்கத்தோடு இண்ட்டர்காம் ரிஸீவரை எடுத்து ஒரு பட்டனைத் தட்டிவிட்டு பேசினாள்.

''ட்யூட்டியில் இப்போ இருக்கிறது யாரு...?''

''ருக்மிணி டாக்டர்...''

''அந்த சுந்தரவள்ளியோட கண்டிஷன் இப்போ எப்படியிருக்கு...?''

''ஒன் மினிட் டாக்டர்... பார்த்து சொல்றேன். வெளியே மூத்த பேஷண்ட்டு களைப் பார்த்துட்டு இருந்ததால கேபினுக் குள்ளே போய்ப் பார்க்க முடியலை...''

''போய்ப்பாரு... அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை எனக்கு ரிப்போர்ட் வரணும்...''

''இதோ... ரிப்போர்ட்டோடு வர்றேன் டாக்டர்...''

''வா...'' டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்த விநாடி —

அறைக்கதவு லேசாய் தட்டப்பட்டது.



'டொக்.. டொக்...'

''எஸ்... ப்ளீஸ் கம் இன்...'' பாரிஜாதம் குரல் கொடுக்க, கதவைத் தள்ளிக் கொண்டு அனந்தநாராயணனும் புனிதாவும் உள்ளே வந்தார்கள்.

அறைக்குள் ஒரு சில விநாடிகளுக்கு வேண்டாத நிசப்தம் நிலவியது. அனந்த நாராயணன் அந்த மௌனத்தைக் கலைத்தார்.

''டாக்டர்...! இப்ப சுந்தரவள்ளிக்கு எப்படியிருக்கு? உயிர்க்கு எந்த ஆபத்தும் இல்லையே...?''

இராமன் நாயர் கோபத்தோட நாற்காலியைத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

''ஏன்... சுந்தரவள்ளி உயிரோடு இருந்தா அவளைக் கொலை பண்ணிட்டுப் போலாம்ன்னு வந்தியா...?''

''வெரி ஸாரி.... இராமன் நாயர்...! ஏதோ ஒரு கோபத்துல அப்படிப் பண்ணிட்டேன்...''

பாரிஜாதம், அனந்தநாராயணனை ஏறிட்டாள்.

''மிஸ்டர் அனந்தநாராயணன்...! சுந்தர வள்ளியோட கண்டிஷன் ரொம்பவும் சீரியஸ். தலை வேகமாய் போய் கதவுல மோதியதால் செரிபரல் ஹெமரேஜ். ஐ.ஸி.யில் அட்மிட் பண்ணி ட்ரீட்மெண்ட் கொடுத்து இருக்கேன். அது எந்த அளவுக்கு உயிரைக் காப்பாத் தும்ன்னு தெரியலை. ஒரு மணி நேரம் போனாத்தான் எதையுமே தீர்மானமாய் சொல்ல முடியும்...''

''டாக்டர்! எவ்வளவு பணம் செல வானாலும் பரவாயில்லை. சுந்தரவள்ளியை காப்பாத்திடுங்க...''

''பணம் ஒரு பிரச்னையே கிடையாது அனந்தநாராயணன். பணத்தை செலவ பண்ண இராமன் நாயரே தயாராய் இருக்கார்.. நான் சுந்தரவள்ளிக்கு என்ன ட்ரீட்மெண்ட் தரணுமோ, அதை தந்திருக்கேன். லெட் அஸ் வெயிட் ஃபார் ஒன் மோர் ஹவர்...''

டாக்டர் பாரிஜாதம் சொல்லி முடிக்க வில்லை, மேஜையின் மேல் இருந்த இண்ட்டர்க்காம் கூப்பிட்டது.

எடுத்தாள்.

''எஸ்...''

''டாக்டர்...! நான் ருக்மிணி...''

''சொல்லு...''

''பேஷண்ட் சுந்தரவள்ளி இறந்துட் டாங்க டாக்டர்...''

''ருக்மிணி! நீ என்ன சொல்றே... சுந்தரவள்ளி இறந்துட்டாளா...? பல்ஸ் பார்த்தியா...?''

''பார்த்தேன் டாக்டர்... பல்ஸ் சுத்தமாய் இல்லை. நீங்க வந்து பாருங்க டாக்டர்...''

''இதோ... வர்றேன்...'' பாரிஜாதம் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்தாள். ஐ.ஸி.யூனிட்டை நோக்கி நடக்க, எல்லோரும் பின்தொடர்ந்தார்கள்.



2005ஆம் ஆண்டின் டென்னீஸ் தர வரிசைப்படி இப்போது முதல் இடத்தில் இருக்கும் டென்னீஸ் வீராங்கனை யார் தெரியுமா?

டேவன் போர்ட்.



## 13

டாக்டர் பாரிஜாதம் சுந்தரவள்ளியை சோதித்துப் பார்த்துவிட்டு உதட்டை பிதுக்கியபடி இராமன் நாயரிடம் திரும்பினாள்.

''என்ன டாக்டர்...?''

''உயிர் பிரிஞ்சு பத்து நிமிஷம் ஆச்சு...''

அனந்தநாராயணன் பதைபதைப்போடு நிமிர்ந்தார்.

''நல்லாப் பாருங்க டாக்டர்...''

பாரிஜாதம் பெருமூச்சுவிட்டாள். ''பார்க்க ஒண்ணுமேயில்லை அனந்தநாராயணன். ஏற்கெனவே நான் சொன்ன மாதிரி – சுந்தரவள்ளிக்கு கீழே விழுந்து அடிபட்டதில் செரிபரல் ஹெமரேஜ். உயிர் பிழைக்க சான்ஸஸ் ரொம்பவும் கம்மியாகவே இருந்தது. இருந்தாலும் சுந்தரவள்ளியைக் காப்பாற்ற ரொம்ப ட்ரை பண்ணினேன். முடியலை...''

அனந்தநாராயணனும் புனிதாவு
திக்பிரமை பிடித்துப் போய் நிற்க, பாரிஜாத
மெல்லிய குரலில் அவர்க்கு மட்டு
கேட்கும்படியாய் சொன்னாள். ''வாங்க..
என்னோட ரூமுக்குப் போய் மற்றதை
பேசிக்குவோம்...''

நர்ஸ் ருக்மணி சுந்தரவள்ளியி
உடம்பை வெள்ளை விரிப்பால் போர்த்தி
கொண்டிருக்க எல்லோரும் மௌனமா
வெளியே வந்தார்கள். வராந்தாவில் அ
நிமிஷம் நடந்து அறைக்குள் நுழைந்தார்கள்
கதவு சாத்தப்பட்டதுமே இராமன் நாய
அனந்தநாராயணனைப் பார்த்து கத்தினார்.

''இது ஒரு அப்பட்டமான கோல்ட்
ப்ளட்டட் மர்டர். இதுக்கு என்ன பதில்
சொல்லப் போறீங்க...?''

அனந்தநாராயணன் தலை குனிந்தார்.

''நா...நான்...இப்படி நடக்கும்னு
எதிர்பார்க்கலை...ஏதோ கோபத்துல பிடிச்சு
தள்ளிவிட்டதுல எதிர்பாராதவிதமா இப்படி
ஆயிடுச்சு...''

''சரி... வாங்க... போலீஸ் ஸ்டேஷனுக்கு
போலாம். போய் இப்ப நீங்க என்கிட்டே
சொன்னதையே அங்கேயிருக்கிற இன்ஸ்
பெக்டர் கிட்டே சொல்லுங்க. அவர் என்ன
பதில் சொல்றார்ன்னு பார்க்கலாம்.''

பாரிஜாதம் இராமன் நாயரைப் பார்த்து
கையமர்த்தினாள். ''நாயர்...! திரும்பத்



திரும்ப ஒண்ணையே பேசிட்டு
இருக்கிறதுல ஒரு பிரயோஜனமும் இல்லை.
சுந்தரவள்ளியை கொலை செய்யணும்ங்கிற
நோக்கத்துல அனந்தநாராயணன் அவளைத்
தள்ளி விடலை...! எதிர்பாராத விதமாய் நடந்த
சம்பவம் அது. இங்கே ஹாஸ்பிட்டலில்
இருக்கிற நர்ஸ்களுக்கு சுந்தரவள்ளி தானாய்
கீழே விழுந்து தலையில் அடிபட்டதாய்
சொல்லியிருக்கேன். அனந்தநாராயணனை
இதுல சம்பந்தப்படுத்தினால் நீங்க எந்த
நோக்கத்துக்காக கேரளாவிலிருந்து இங்கே
வந்தீங்களோ அந்த நோக்கம் நிறைவேறாது.
உங்களுக்கு இப்போ குந்தவை வேணுமா...?
இல்லை... அனந்தநாராயணனை போலீஸ்ல
மாட்டிவிடணுமா...? எது முக்கியம்
சொல்லுங்க...!''

''குந்தவைதான் வேணும்...''

''அப்படீன்னா அதைப்பத்தி மட்டும்
பேசுங்க... நர்ஸ் சுந்தரவள்ளியை மறந்
துடுங்க...! மிஸ்டர் அனந்தநாராயணன்...!''

''டாக்டர்...!''

''இராமன் நாயர்க்கும் அவரோட மனைவி
தங்கம்மாவுக்கும் குந்தவை விஷயமா என்ன
பதிலைச் சொல்லப் போறீங்க...? குந்தவை
கிட்ட விஷயத்தை பக்குவமாய் சொல்லி
அவளை இவங்ககிட்டே ஒப்படைக்கப்
போறீங்களா...? இல்லை வேற ஏதாவது
மாற்று ஏற்பாடு பண்ணப் போறீங்களா...?''

அனந்தநாராயணன் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு பேச்சை ஆரம்பித்தார்.

''டாக்டர்...! இருபது வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை இப்போ தூசி தட்டிப் பாக்கறது கொஞ்சம் கூட சரியில்லை. தங்கம்மாவும் குந்தவையும் ஒரே ஜாடையாய் இருக்கிறதால குந்தவை அவங்க குழந்தையாய்த்தான் இருக்க முடியும் என்கிற உண்மையையும் நாங்க ஒத்துக்கறோம். ஆனா இவ்வளவு வருஷங்களுக்குப் பின்னாடி இந்த உண்மை வெளியே வர்றதால பாதிக்கப்படப் போறது நாங்களோ, இராமன் நாயர் தம்பதிகளோ கிடையாது. பாதிக்கப் படப் போறது முழுக்க முழுக்க குந்தவைதான். இன்றைய நிலைமையில் குந்தவை புகழ் பெற்ற ஒரு டென்னீஸ் வீராங்கனை. அவள் இந்தியா சார்பில் விளையாடி எவ்வளவோ சாதனைகள்ள நிகழ்த்த தன்னை தயார் படுத்திகிட்டு இருக்கா. இந்தச் சூழ் நிலையில் அவளுடைய பிறப்பு சம்பந்தப் பட்ட உண்மை வெளியே வர்றது எந்த விதத்தில் சரின்னு நீங்களே கொஞ்சம் யோசனை பண்ணிப்பாருங்க...''

பாரிஜாதம் இராமன் நாயரை ஏறிட்டாள்.

''நாயர்! இதுக்கு நீங்க என்ன பதில் சொல்லப் போறீங்க?''

''ஸாரி டாக்டர்...! அவர் கேட்கிற கேள்விக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய



நிலைமையில் நானோ என்னோட மனைவியோ இல்லை. எங்களுக்கு எங்க பொண்ணு குந்தவை வேணும். குந்தவையைப் பெற்ற பெற்றோர் நாங்கதான் என்கிற உண்மை வெளியுலகத்துக்கு தெரிஞ்சா அது எல்லோர்க்கும் அதிர்ச்சி யாகவும், கொஞ்ச காலத்துக்கு டி.வி.யிலும், பத்திரிகைகளிலும் பரபரப்பாகவும் இருக்கத் தான் செய்யும். அது எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். அதுக்கப்புறம் எல்லோரும் அதை மறந்துடுவாங்க... எவ்வளவு பெரிய பரபரப்பான செய்தியாக இருந்தாலும் அந்த பரபரப்பெல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். அனந்தநாராயணன் இப்போ செய்ய வேண்டியதெல்லாம் ஒரே ஒரு வேலைதான். குந்தவைகிட்டே விஷயத்தை பக்குவமா எடுத்துச் சொல்லி எங்களோடு அவளை அனுப்பி வைக்கணும்...''

பாரிஜாதம் இடைமறித்தாள்.

''நாயர்...! நான் ஒண்ணு சொன்னா நீங்க கேட்பீங்களா...?''

''சொல்லுங்க டாக்டர்...''

''குந்தவை உங்க பொண்ணுதான். நான் மறுக்கலை. அனந்தநாராயணனும் அவருடைய மனைவியும் கூட மறுக்கலை. ஆனா இருபது வருஷம் வளர்த்த பாசத்துக்குத்தான் பெற்ற பாசத்தைக் காட்டிலும் வலு அதிகம். அதனால ரெண்டு

பேர்க்கும் பொதுவா நான் ஒரு யோசனை சொல்றேன். அதை நீங்க ரெண்டு பேரும் ஏத்துக்கணும்ங்கிறது என்னோட விருப்பம்.''

''உங்க யோசனை என்ன டாக்டர்...?'' நாயர் கேட்க பாரிஜாதம் தொடர்ந்தாள்.

''குந்தவையை நீங்க அனந்தநாராயணன் தம்பதிகளுக்கு விட்டுக் கொடுத்துடுங்க...குந்தவை கடைசி வரைக்கும் அவங்க பொண்ணாவே இருக்கட்டும். அதுக்குப்பதிலா நீங்க ஒரு பெரிய தொகையை அவங்க கிட்டயிருந்து வாங்கிக்குங்க...''

''என்னது! பணமா...?''

''இதோ பாருங்க நாயர்... ஒண்ணை இழந்துதான் ஒண்ணைப் பெறணும்... வீணா பிடிவாதம் பிடிச்சு உங்களுக்குள்ளே சண்டை போட்டுக்காதீங்க... ஏற்கெனவே இப்படி சண்டை போட்டுத்தான் நர்ஸ் சுந்தரவள்ளியை நாம் இழந்துட்டோம்... குந்தவைக்காக நீங்க ஒரு பெரிய தொகையை வாங்கிகிட்டு கௌரவமாய் ஒதுங்கிடறதுதான் நல்லது.''

நாயர் சில விநாடிகள் யோசித்துவிட்டு பின் நிமிர்ந்தார். ''ஓ.கே. டாக்டர்...! நீங்க சொன்னதுக்கு நான் கட்டுப்படறேன். பட்... தொகை எவ்வளவு...?''

பாரிஜாதம் அனந்தநாராயணனை ஏறிட்டாள்.



''சொல்லுங்க...! குந்தவைக்காக நீங்க எவ்வளவு பணம் தர முடியும்?''

''ஒரு பத்து லட்சம்...''

''என்ன அனந்தநாராயணன்... விளையாட நீங்களா...? குந்தவை டென்னீஸ் ஆட்டத்தின் மூலமாகவும்; விளம்பரப்படங்கள் மூலமாகவும் கோடிக்கணக்கான ரூபாயை சம்பாதிச்சிருக்கா.... நீங்களும் கடந்த ரெண்டு மூணு வருஷ காலத்தில் ஏகப்பட்ட சொத்துக்களை வாங்கிப் போட்டிருக்கீங்க... தான் பெத்த பொண்ணையே அவங்க விட்டுக் கொடுக்கத் தயாராய் இருக்கும்போது நீங்க என்னடான்னா ஒரு அல்பத் தொகையை தர்றதா சொல்றீங்களே... தொகையை உயர்த்துங்க...''

''நீங்க எவ்வளவு எதிர்பார்க்கறீங்க...?''

''ஒரு கோடி...''

''இ...இ...இது... ரொம்ப அதிகம்... டாக்டர்.''

''ஓ.கே....! இந்த தொகை அதிகம்ன்னு நீங்க நினைச்சா பணத்தை பூராவும் நீங்களே வெச்சுகிட்டு குந்தவையை அவங்களோட அனுப்பி வெச்சுடுங்க.''

''குந்தவை எங்களுக்கு வேணும் டாக்டர்...''

''அப்படீன்னா... ஒரு கோடி ரூபாய் பணத்தைக் குடுத்துடுங்க.''

''சரி...! அம்பது லட்சம் கொடுத்துட றோம் டாக்டர்.''

''இது கத்திரிக்காய் வியாபாரம் கிடையாது அனந்தநாராயணன். நீங்க இப்ப இருக்கிற நிலைமையை நல்லா யோசனை பண்ணிப்பாருங்க... நர்ஸ் சுந்தரவள்ளி இறந்து போக நீங்கதான் காரணம். நாயர் போலீஸுக்கு போலாம்ன்னு சொன்னார். நான்தான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன். உங்களைப் பொறுத்தவரைக்கும் கோடி ரூபாய்ங்கிறது ஒரு பெரிய தொகையே கிடையாது. இனி எதிர்காலத்துல குந்தவையை வெச்சு பல கோடி ரூபாய்களை சம்பாதிக்கப் போறீங்க...''

பாரிஜாதம் சொல்லச் சொல்ல புனிதா தன் கணவர் அனந்தநாராயணன் தோளை மெல்ல சுரண்டினாள்.

''என்னங்க... அவங்க கேட்கிற பணத்தைக் கொடுத்துடலாம். குந்தவை நமக்கு வேணுங்க...''

''பார்த்தீங்களா...! உங்க மனைவி நிலைமையை சரியானபடி புரிஞ்சுகிட்டாங்க''

அனந்தநாராயணன் ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்தார்.

''ஓ.கே... டாக்டர்...! நீங்க சொன்னபடி பணத்தைக் கொடுத்துடறேன். பட் தொகை பெரிசு... ரெடி பண்ண ரெண்டு மூணு நாளாகும். பரவாயில்லையா...?''



''பரவாயில்லை...! நீங்க பணத்தை ரெடி பண்ணிட்டு எனக்கு போன் பண்ணுங்க... அதுவரைக்கும் ராமன் நாயரும் அவருடைய மனைவியும் இதே ஊர்லதான் தங்கி யிருப்பாங்க...''

அனந்தநாராயணன் சில விநாடி தயக்கத்துக்குப் பின் கேட்டார். ''டாக்டர்! சுந்தரவள்ளியோட பாடி...?''

''அதைப்பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டாம். சுந்தரவள்ளிக்கு சொந்தபந்தம் யாரும் கிடையாது. அவ உடலை முறைப்படி எப்படி அடக்கம் பண்ணணுமோ அப்படி பண்ணிடறேன்... இதுல போலீஸ் நுழையாத படி நான் பார்த்துக்கிறேன்... நீங்க வீட்டுக்குப் போய் நிம்மதியாதூங்குங்க...''

பாரிஜாதம் கைகளைக் கூப்பினாள்.

> டென்னீஸ் விளையாட்டு வீரர் களும், வீராங்கனைகளும் தங்களுடைய லக்கேஜ்களை தாங்களேதான் சுமந்து வருவார்கள். உதவியாளர்களையோ கூலியாட்களையோ அமர்த்திக் கொள்ள மாட்டார்கள். காரணம், குடிக்கும் தண்ணீர், சாப்பிடும் பிஸ்கெட் போன்றவைகளில் மயக்க மருந்தை கலக்கவும், டென்னீஸ் ராக்கெட்டுகளில் சில்மிஷம் செய்யவும் வெளியாட்கள் முயற்சி செய்யலாம். பணத்துக்கு ஆசைப்பட்டு உதவியாளர்கள் சம்மதித்து விடுவார்களோ என்கிற பயம்தான்.



# 14

மறுநாள். அதிகாலை, ஐந்தரைமணி.

அழைப்பு மணி அலறும் சத்தம் கேட்டு முதலில் கண் விழித்த புனிதா பக்கத்தில் படுத்து தூங்கிக் கொண்டிருந்த அனந்த நாராயணனின் தோளைத் தொட்டாள்.

''என்னங்க...! காலிங்பெல் சத்தம் கேட்குது. யார்ன்னு போய்ப் பாருங்க... ராத்திரியெல்லாம் எனக்கு சரியான தூக்கம் இல்லாததால எந்திரிக்க முடியலை:..'' அனந்தநாராயணன் தூக்கக் கலக்கத்தோடு எழுந்து போய் வாசல் கதவைத் திறந்தார்.

வெளியே –

இன்ஸ்பெக்டர் ஒருவர் நின்றிருந்தார். அவர்க்குப் பின்னால் இரண்டு கான்ஸ்டபிள்கள்.

''எ...எ...எஸ்...''

''நீங்க மிஸ்டர் அனந்தநாராயணன்...?''

''ஆமா...''

''ஸார்... அ'யம் இன்ஸ்பெக்டர் நந்தகோபாலன். உங்ககிட்ட ஒரு என்கொய்ரிக்காக வந்திருக்கேன்...''

''ப்ளீஸ் கெட்... இன்...'' அனந்த நாராயணனின் உதடுகள் இயல்பாய்



சொன்னாலும் இருதயம் பயத்தில் உதைத்துக் கொண்டது.

'நர்ஸ் சுந்தரவள்ளியின் விவகாரம் வெளியே கசிந்துவிட்டதோ?'

இன்ஸ்பெக்டர் நந்தகோபாலன் உள்ளே வந்து சோபாவுக்கு தன் முதுகைக் கொடுக்க, அனந்தநாராயணன் எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தபடி கேட்டார்.

''சொல்லுங்க...என்ன என்கொய்ரி...?''

''உங்களுக்கு இராமன் நாயரையும் அவருடைய மனைவி தங்கம்மாவையும் தெரியுமா...?'

'விஷயம் எங்கேயோ உடைப்பு எடுத்து பாய்ந்துவிட்டது!' அனந்தநாராயணனின் அடிவயிற்றில் திகில் பரவியது.

''அது... வந்து... வந்து...''

''ப்ளீஸ்...! எதையும் மறைக்க முயற்சி பண்ணாதீங்க. தெரியாதுன்னு சொல்லி வம்பிலேயும் மாட்டிக்காதீங்க...''

''அ...அ...அவங்களை எனக்குத் தெரியும்...''

''எப்படி தெரியும்...?''

''நாலைஞ்சு நாளைக்கு முன்னாடி டாக்டர் பாரிஜாதம்தான் இராமன் நாயரையும் அவருடைய மனைவி தங்கம்மாவையும் என்கிட்டே கூட்டிட்டு வந்தார். கேரளாவில் ஏதோ கல்ச்சுரல் ப்ரோக்ராம் ஏற்பாடு

பண்ணியிருக்கிறதாகவும் அதில் சீ∴ப் கெஸ்ட்டா கலந்துக்க என்னோட டாட்டர் குந்தவையை அனுப்பி வைக்க முடியுமான்னும் கேட்டாங்க... குந்தவை டென்னீஸ் போட்டிகளில் கலந்துக்க வேண்டியிருப்பதால கல்ச்சுரல் ப்ரோக்ராமில் கலந்துக்க முடியாதுன்னு நான் சொன்னேன். அவங்களும் 'சரி'ன்னு போயிட்டாங்க...''

''அவங்க எப்ப உங்க வீட்டுக்கு வந்தாங்கன்னு சொன்னீங்க...?''

''நாலைஞ்சு நாளைக்கு முன்னாடி...''

''அதுக்கப்புறம்... நீங்க அவங்களைப் பார்க்கலை...?''

''பா...பார்க்கலை...''

''மிஸ்டர் அனந்தநாராயணன்...! நீங்க ஒரு வி.ஐ.பியோட ∴பாதர். பொய் சொன்னா வீணான பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். நான் இப்போ உங்ககிட்டே இவ்வளவு காலை நேரத்துல வந்ததுக்கான காரணம் என்ன தெரியுமா...?''

''எ...என்ன...?''

''ராமன்நாயரும் அவரோட மனைவி தங்கம்மாவும் இப்போ உயிரோடு இல்லை. நேற்று ராத்திரி அவங்க ரெண்டு பேரும் தங்கியிருந்த ஹோட்டலில் கொலை செய்யப்பட்டு இருக்காங்க. ரொம்பவும் கொடூரமான கொலை. ஆக்ஸாபிளேடால கழுத்தை அறுத்து...''



அனந்தநாராயணனும், அறையிலிருந்து வெளிப்பட்ட புனிதாவும் அதிர்ந்து போய் உறைந்தார்கள்.

''கொ...கொலையா... என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்...? யார் பண்ணினது...?''

''தெரியலை... அவங்க வெச்சிருந்த பாக்கெட் டைரியில் உங்க பேரும் செல்போன் நம்பரும் இருந்ததால் உங்களைத் தேடி வந்தோம். ஹோட்டல் வரைக்கும் கொஞ்சம் வர முடியுமா...?''

''வ...வ...வரணுமா...?''

''ப்ளீஸ்...''

அனந்தநாராயணன் நைந்து போய் எழுந்தார்.

*டென்னீஸ் விளையாட்டில் வெற்றி பெறும் எந்த ஒரு வீரரும் வீராங் கனையும் வருமானவரித்துறைக்கு 'சூப்பர் டாக்ஸ்' என்ற பெயரில் எக்கச் சக்கமாய் பணம் கட்ட வேண்டும். டென்னீஸ் விளையாட்டின் தேவதை யாய் விளங்கிய ஸ்டெபி கிராபி வருமான வரித்துறையிடம் மாட்டிக் கொண்டு படாதபாடு பட்டிருக்கிறார்.*



## 15

**போ**லீஸ் ஜீப் ஹோட்டலுக்கு முன்பாய் போய் நின்றது.

இன்ஸ்பெக்டர் நந்தகோபாலனைத் தொடர்ந்து அனந்தநாராயணனும் புனிதாவும் இறங்கினார்கள்.

சப்–இன்ஸ்பெக்டர் ஒருவர் எதிர்பட்டு நந்தகோபாலனுக்கு சல்யூட் வைத்தார்.

''ஸார்...''

''என்ன...?''

''டாக்டர் பாரிஜாதத்துக்கு போன் பண்ணி விஷயத்தை சொன்னேன். அவரும் வந்து உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கார்...''

''குட்...! வாங்க போலாம்.''

ஹோட்டலின் ஏழாவது மாடிக்கு லிஃப்டில் பயணித்தார்கள். முப்பது செக்கண்ட் பயணம். ஏழாவது மாடி வந்தது. போலீஸ், ஃபாரன்ஸிக் என்று ஒரு சிறிய கும்பல் அந்த வராந்தா முழுவதும் சிதறியிருந்தது.

''மிஸ்டர் அனந்தநாராயணன்...! நீங்களும் உங்க மனைவியும் உள்ளே போய் கொலையுண்டு கிடக்கிறது இராமன் நாயரும் அவருடைய மனைவியும்தானான்னு பார்த்துட்டு வந்துருங்க. நான் பக்கத்து ரூம்ல வெயிட் பண்ணிட்டிருக்கிற டாக்டர் பாரிஜாதத்துகிட்டே பேசிட்டிருக்கேன்...'' இன்ஸ்பெக்டர் நந்தகோபாலன் சொல்லி விட்டு பக்கத்து அறைக்குள் நுழைந்துவிட, அனந்தநாராயணனும் புனிதாவும் கொலை நடந்த அறைக்குள் நுழைந்தார்கள்.



இரட்டைக் கட்டில் ரத்த சகதியாய் மாறியிருக்க, இராமன்நாயரும் தங்கம்மாவும் கழுத்து அறுபட்ட நிலையில் மல்லாந்து தெரிந்தார்கள். தங்கம்மாவின் முகம் சிதைக்கப்பட்டிருந்தது.

மேற்கொண்டு அந்த காட்சியைப் பார்க்க பிடிக்காமல் இருண்டு போன முகங்களோடு வெளியே வந்தார்கள். புனிதாவின் கண்களில் நீர்.

''என்னங்க...இது! கொடுமையாய் இருக்கு. யார் இந்தக் காரியத்தை பண்ணினது...?''

''தெரியலையே...?''

''என்னங்க...! இனிமேலும் நாம போலீஸ்கிட்டே எதையும் மறைக்கக் கூடாது. நடந்த எல்லா விஷயத்தையும் சொல்லிடு வோம். இல்லேன்னா இந்தக் கொலைப்பழி நம்ம மேல விழுந்துடும்...''

''நானும் அந்த முடிவுக்குத்தான் வந்திருக்கேன் புனிதா. குந்தவைக்கும் போன் பண்ணி சிங்கப்பூரிலிருந்து உடனே வரச் சொல்லிடலாம்.''

''வாங்க...! மொதல்ல இன்ஸ்பெக்டரைப் போய்ப் பார்க்கலாம்.''

இருவரும் பக்கத்து அறைக்குள் நுழைந்தார்கள். டாக்டர் பாரிஜாதம் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி கையில் வைத்துக் கொண்டு, அழுகை அடைத்துக்

கொண்ட குரலோடு பேசிக் கொண்டு இருந்தாள்.

''இன்ஸ்பெக்டர்...! நான் பெரிய தப்பு பண்ணிட்டேன்...! கொலை செய்யப்பட்ட இந்த இராமன் நாயரும் தங்கம்மாவும் சரியான கிரிமினல்கள்னு தெரிஞ்சிருந்தும், வெளிநாட்டில் இருக்கிற என் பொண்ணோட உயிரைக் காப்பாத்தறதுக்காக அவங்க ரெண்டு பேரும் ஆடின ஆட்டத்துக்கெல்லாம் தாளம் போட்டேன்.''

இன்ஸ்பெக்டர் திகைத்தார்.

''டாக்டர்...! நீங்க என்ன சொல்றீங்க...? இந்த இராமன் நாயரும் தங்கம்மாவும் கிரிமினல்களா...?''

''எஸ்...! பத்து நாளைக்கு முன்னாடி அவங்க ரெண்டு பேரும் ஒரு ராத்திரி வேளையில் ஹாஸ்பிடல்ல வந்து என்னைப் பார்த்தாங்க. ஒரு பேஷண்டைப் பார்க்க வந்தவங்க மாதிரி என்கிட்டே பேசிக் கிட்டிருக்கும்போதே துப்பாக்கியை எடுத்து மேஜைமேல வெச்சுட்டு என்னை மிரட்டற தொனியில் பேச ஆரம்பிச்சுட்டாங்க. 'ஆஸ்திரேலியாவில் எம்.எஸ். படிச்சிட்டிருக்கிற உன்னோட பொண்ணு உயிரோடு இருக்கணும்னா நாங்க ரெண்டு பேரும் சொல்றபடி நீ நடந்துக்கணும். நாங்க இங்கே ஒரு திட்டத்தோடு வந்து இருக்கோம். அந்த திட்டம் என்னாங்கிறதையும் இப்போ சொல்லிடறோம். என்னோட பேர் இராமன்



நாயர். இவ என்னோட ஒய்ஃப் தங்கம்மா. இவ முகத்தை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்துட்டு யாரோட ஞாபகம் வருதுன்னு சொல்லு பார்க்கலாம்'ன்னு சொன்னார். நான் தங்கம்மாவோட முகத்தைப் பார்த்துட்டு 'டென்னீஸ் வீராங்கனை குந்தவையோட ஞாபகம் வருது'ன்னு சொன்னேன். அதுக்கு இராமன் நாயர் சிரிச்சுகிட்டே இது தங்கம்மாவோட ஒரிஜனல் முகம் கிடையாது. குந்தவை மாதிரியே பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்ட முகம்'ன்னு சொன்னார்... அவர் அப்படி சொன்னதும் நான் அதிர்ந்து போயிட்டேன். 'எதுக்காக இப்படி'ன்னு கேட்டேன். அப்பத்தான் அவங்க அந்த திட்டத்தைப் பத்தி சொன்னாங்க...''

''என்ன திட்டம்...?''

''இருபது வருஷத்துக்கு முந்தி தங்கம்மாவுக்கு என்னோட ஹாஸ்பிட்டலில் பிரசவம் நடந்ததாகவும், அப்போது அவளுக்குப் பிறந்த பெண் குழந்தையை எடுத்து அனந்தநாராயணன் – புனிதா தம்பதிகளுக்கு கொடுத்துட்டதாகவும் நான் சொல்லணுமாம். புனிதாவுக்கு குழந்தை இறந்தே பிறந்ததாகவும் இனிமே அவளுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என்கிற காரணத்தால் ஒரு தொகையை வாங்கிகிட்டு நர்ஸ் சுந்தரவள்ளியின் உதவியோட புனிதாவுக்கு கொடுத்த குழந்தைதான் இப்போ டென்னீஸ் வீராங்கனை

குந்தவைன்னு அனந்தநாராயணன், புனிதா கிட்டே சொல்லி குழப்பத்தை உண்டாக்கி ஒரு பெரிய தொகையை சுருட்டிகிட்டு போயிடணும்ங்கிறதுதான் அவங்க திட்டம். இந்த திட்டத்தை வெற்றிகரமாய் செயல் படுத்த என்னோட ஹாஸ்பிட்டலில் முன்பு நர்ஸாய் வேலை பார்த்துக்கிட்டிருந்த சுந்தரவள்ளியையும் சேர்த்துகிட்டாங்க... நான் இந்த திட்டத்துக்கு ஒத்துழைக்க முடியாதுன்னு சொன்னபோது ஆஸ்திரேலியா வில் மேற்படிப்பு படிச்சிட்டிருக்கிற என்னோட டாட்டர் ஸ்வர்ணலதாவை கூலிப்படை ஆட்களை வெச்சு கொன்னுடப் போறதாக சொன்னாங்க. ஹாஸ்பிட்டலையே வெடி குண்டால தகர்த்திடுவோம்ன்னு சொன்னாங்க. அவங்க மிரட்டலுக்குப் பயந்து நான் திட்டத்துக்கு ஒத்துழைப்பு கொடுக்க ஒத்துகிட்டேன். திட்டபடி நான், நர்ஸ் சுந்தரவள்ளி, இராமன் நாயர், தங்கம்மா நாலு பேரும் போய் அனந்தநாராயணனையும் புனிதாவையும் பார்த்தோம். குந்தவை தங்கம்மாவோட பொண்ணுன்னு நான் சொன்னதையும், தங்கம்மாவோட ஜாடையும் குந்தவையோட ஜாடையும் ஒரே மாதிரியா இருந்ததையும் பார்த்த அனந்தநாராயணனும், புனிதாவும் அதுதான் உண்மைன்னு நினைச்சு அரண்டு போயிட்டாங்க...''

''மத்ததை நாங்க சொல்றோம் ஸார்...'' பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த



அனந்தநாராயணனும் புனிதாவும் இன்ஸ்பெக்டர்க்கு அருகில் வந்தார்கள். ஒரு நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு உட்கார்ந்த அனந்தநாராயணன் நேற்று இரவு வரைக்கும் நடந்த சம்பவங்களை கோர்வையாய் சொல்லி முடித்தார்.

எல்லாவற்றையும் உன்னிப்பாய் கேட்டுக் கொண்ட இன்ஸ்பெக்டர் நந்தகோபாலன் மூன்று பேர்களையும் ஒரு பொதுவான பார்வை பார்த்துக் கொண்டு கேட்டார்.

''சரி...! இராமன் நாயரையும் தங்கம்மாவையும் கொலை பண்ணினது யாராய் இருக்கக் கூடும்ன்னு உங்களால கெஸ் பண்ண முடியுதா...?''

''முடியலை இன்ஸ்பெக்டர்... பட் எனக்கு ஒரு சந்தேகம் உண்டு...'' டாக்டர் பாரிஜாதம் இப்படி சொன்னதும் நந்தகோபாலன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''என்ன சந்தேகம்... சொல்லுங்க டாக்டர்...''

''நர்ஸ் சுந்தரவள்ளியைக் கொலை பண்ணினது இராமன் நாயர். இந்த விஷயம் வெளி நபர் யார்க்கோ தெரியப்போக, அவங்க இந்தக் கொலைகளைப் பழிக்குப் பழி வாங்கும்விதமா பண்ணியிருக்கலாம்.''

''அதாவது சுந்தரவள்ளிக்கு வேண்டியவங்க யாராவது...?''

''ஆமா...''

''சுந்தரவள்ளிக்குத்தான் சொந்தபந்தம் எதுவும் கிடையாதுன்னு சொன்னீங்களே டாக்டர்...?''

''சொந்த பந்தம் கிடையாதுதான்... இருந்தாலும் அவமேல பாசமாய் இருக்கிற வங்க யாராவது பண்ணியிருக்கலாமோன்னு எம் மனசுக்குள்ளே ஒரு சந்தேகம்.''

நந்தகோபாலன் யோசனையாய் தன் தாடையைத் தேய்த்தார்.

*கிரிக்கெட்டில் மேட்ச் ஃபிக்ஸிங் இருப்பது போலவே டென்னீஸிலும் மேட்ச் ஃபிக்ஸிங் உண்டு. வீரர்களின் வெற்றி தோல்வி குறித்து பெரிய அளவில் கோடிக்கணக்கான ரூபாய் களுக்கு சூதாட்டம் நடைபெறும். நம்பர் - 1 விளையாட்டு வீரர் முதல் சுற்றிலேயே தோற்று வெளியேறுவது இந்த சூதாட்டத்தின் அடிப்படையில்தான். தோற்றுப் போன விளையாட்டு வீரர்க்கு திரை மறைவில் கோடிக்கணக்கான ரூபாய்களை கொட்டிக் கொடுப்பார்கள்.*



## 16

**போ**லீஸ் கமிஷனர் அலுவலகம்.

கமிஷனர் விஸ்வேஷ்வரன் தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த டெப்டி கமிஷனரையும் இன்ஸ்பெக்டர் நந்த



கோபாலனையும் ஒரு கோபப்பார்வை பார்த்தபடி பொரிந்து தள்ளினார்.

''இராமன் நாயரும், தங்கம்மாவும் கொலை செய்யப்பட்டு இன்னிக்கு ஒரு வாரமாகப் போகுது. பட் இதுவரைக்கும் கொலையாளி யார்ன்னு உங்களால கெஸ்கூட பண்ண முடியலை. கொலைகள் நடந்த அறையில் ஒரு சின்னத் தடயம் கூட கண்டுபிடிக்க முடியலை. கொலை செய்யப் பட்ட ரெண்டு பேரும் பக்கா கிரிமினல்கள். அந்த ரெண்டு பேர்க்கும் பின்னாடி ஒரு கும்பலே கூட இருக்கலாம். கொலையாளி களைக் கண்டுபிடிக்க இதுவரைக்கும் நீங்க என்னென்ன நடவடிக்கைகளை எடுத்தீங்க? அந்த நடிவடிக்கைகள் எந்த அளவுக்கு பலனைக் கொடுக்கும்? வாட் ஈஸ் த மோட்டிவேஷன் பிகைண்ட் த மர்டர்ஸ்...? ஷோ மீ த ரிப்போர்ட்...!''

டெப்டி கமிஷனர் இன்ஸ்பெக்டர் நந்தகோபாலனைப் பார்க்க, அவர் தன் கையில் இருந்த ஃபைலை கமிஷனரிடம் நீட்டினார்.

கமிஷனர் ஃபைலை வாங்கி புரட்டிக் கொண்டே நந்தகோபாலனிடம் கேட்டார்.

''இதுவரைக்கும் எத்தனை பேரை என்கொயர் பண்ணியிருப்பீங்க...?''

''இருபது பேர் ஸார்.''

''குந்தவை சிங்கப்பூரிலிருந்து வந்துட்டாங்க இல்லையா?''

“சம்பவம் நடந்த அன்னிக்கே வந்துட்டாங்க ஸார்...”

“அவங்களை என்கொய்ரி பண்ணும் போது உங்களுக்கு உபயோகமான முறையில் எந்த ஒரு க்ளூவும் கிடைக்கலையா?”

“கிடைக்கலை ஸார்... குந்தவை இந்த விஷயத்தில் ரொம்பவும் அப்செட்டா யிட்டாங்க...‘என்னோட அப்பாவையும் அம்மாவையும் இந்தக் கொலையில் சம்பந்தப்படுத்தி அசிங்கம் பண்ணிடா தீங்க’ன்னு கண்ணீர் விட்டு அழுதாங்க....”

“அனந்தநாராயணன் – புனிதா இந்தக் கொலைகளைப் பண்ணியிருக்க வாய்ப்பு இருக்கா?”

“இல்ல ஸார்...! கொலைகளைப் பண்ணக்கூடிய அளவுக்கு அவங்க ரெண்டு பேர்க்கும் தைரியம் கிடையாது.”

“சரி...டாக்டர் பாரிஜாதம் இந்தக் கொலைகளைப் பண்ணியிருக்கலாமே...?”

“அந்தக் கோணத்திலும் இன்வெஸ்டி கேஷனை நடத்திப் பார்த்தேன் ஸார். இன்வெஸ்டிகேஷன் சாதகமாய் இல்லை...” நந்தகோபாலன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறைவாசலில் பூட்ஸ் சத்தம் கேட்டது.

கமிஷனர் நிமிர்ந்தார்.

அறைவாசலில் அஸிஸ்டெண்ட் கமிஷனர் சார்லஸ் சல்யூட் அடித்தபடி நின்றார்.



“எஸ்...”

“ஸார்... மே... ஐ...கம் இன்...ஸார்?”

“ப்ளீஸ்...”

சார்லஸ் உள்ளே வந்தார். “ஸார்...! இது இன்னிக்கு வந்த சூரியகாந்தி வார இதழ். இந்த இதழில் ‘வெட்ட வெளிச்சம்’ என்கிற தலைப்பில் சில ‘கிசு கிசு’ செய்திகளைப் போட்டிருக்காங்க... அதுல ஒரு செய்தி குந்தவையைப் பற்றியது. ப்ளீஸ் ரீட் இட் ஸார்.”

சார்லஸ் தன் கையிலிருந்த சூரியகாந்தி வார இதழைப் பிரித்து ஒரு பக்கத்தைக் காட்ட கமிஷனர் வாங்கிப் படித்தார்.

“சரித்திர பெயர் கொண்ட டென்னீஸ் வீராங்கனை வாழ்க்கையில் இப்பொழுது புயல் வீசிக் கொண்டிருக்கும் விஷயம் எல்லோர்க்கும் தெரியும். ஆனால் வெளியே தெரியாத ஒரு விஷயமும் உண்டு. வீராங்கனைக்கு ஒரு ரகசிய சிநேகிதன் இருக்கிற விஷயம் இப்போதுதான் அம்பலத்துக்கு வந்திருக்கிறது. யார் அந்த சிநேகிதன்...? நமது சோடாப்புட்டி கண்ணாடி நிருபர் தோளில் ஜோல்னா பையை மாட்டிக் கொண்டு காமிராவும் கையுமாய் கிளம்பி விட்டார். இன்னும் இரண்டு வாரம் பொறுங்கள். அந்த ரகசிய சிநேகிதனின் போட்டோவை சூரியகாந்தி இதழில் பார்க்கலாம்.”

அந்த செய்தியைப் படித்த கமிஷனர் அதை தனக்கு முன்னால் உட்கார்ந்திருந்த நடப்பு கமிஷனர்க்கும், இன்ஸ்பெக்டர் நந்தகோபாலனுக்கும் காட்ட, அவர்களும் படித்துவிட்டு புருவங்களை உயர்த்தி னார்கள்.

''இது புது செய்தியாய் இருக்கு ஸார்.''

''பத்திரிகைகள் பரபரப்புக்காவும், விற்பனைக்காகவும் இது மாதிரியான செய்திகளைப் போடுவாங்க ஸார்.''

''நோ...! இந்த செய்தியை நெக்லட் பண்ண வேண்டாம். உண்மையோ பொய்யோ என்கொய்ரி பண்ணிடுங்க. மிஸ்டர் நந்தகோபாலன்...!''

''ஸார்...''

''உடனே போய் குந்தவையைப் பாருங்க. பத்திரிகையைக் காட்டி இந்த செய்தி உண்மையா பொய்யான்னு கேளுங்க...''

''எஸ்... ஸார்...''

நந்தகோபாலன் எழுந்து விறைப்பாய் நின்று சல்யூட் ஒன்றைக் கொடுத்துவிட்டு அறையை விட்டு வெளியேறினார்.

வராந்தாவில் நடந்து மைதான பரப்புக்கு வந்து மரத்துக்குக் கீழே நிறுத்திமிருந்த தன்னுடைய பல்ஸர் பைக்கை நெருங்கிய போது முதுகுப் பக்கம் அந்தக் குரல் கேட்டது.



''ஸார்...''

நந்தகோபாலன் திரும்பினார்.

ஒரு இளைஞன் கறுப்பாய், ஒடிசலாய், லுங்கி சட்டை அணிந்து நின்றிருந்தான்.

''என்ன...''

''உங்ககிட்டே கொஞ்சம் பேசணும் ஸார்.''

*சச்சின் டெண்டுல்கர்க்கு முழங்கையில் வீக்கமும் வலியும் உள்ளது. இதற்கு 'டென்னீஸ் எல்போ' என்று பெயர். உண்மையில் டென்னீஸ் விளையாட்டுக்கும் இந்த நோய்க்கும் ஒரு சம்பந்தமும் இல்லை.*



## 17

குந்தவையின் வீட்டு போர்டிகோவில் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே போனார் நந்தகோபாலன்.

அனந்தநாராயணன் எதிர்பட்டார்.

''வாங்க இன்ஸ்பெக்டர்...''

''மிஸ் குந்தவைகிட்டே கொஞ்சம் பேசணும்... மாடியில்தானே இருக்காங்க...?''

''ஆமா...''

மாடிப்படிகளில் ஏறினார் நந்தகோபாலன். மாடி வராந்தாவின் முதல் அறையிலேயே

டென்னீஸ் சம்பந்தப்பட்ட புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த குந்தவை இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் புத்தகத்தை மூடிவிட்டு எழுந்தாள். என்ன என்பது போல் புருவங்களை உயர்த்தினாள்.

''ஸாரி ஃபார்... த டிஸ்டர்பன்ஸ்... உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்...''

''வாட் அபௌட்...?''

''இந்த பத்திரிகையில் வந்த நியூஸைப் பாருங்க...'' கையில் சுருட்டி வைத்து இருந்த சூரியகாந்தி புத்தகத்தைப் பிரித்து 'வெட்ட வெளிச்சம்' என்ற அந்தப் பக்கத்தைக் காட்டினார்.

குந்தவை படித்துவிட்டு புன்னகைத்தாள்.

''அந்த 'ரகசிய சிநேகிதன்' யார்ன்னு கேட்க வந்தீங்களா?''

''ஆமா...''

''இதை அந்த பத்திரிகைக்காரங்க கிட்டேயே கேட்க வேண்டியதுதானே...?''

''கேட்காம இருப்பேனா...?''

''என்ன சொன்னாங்க...?''

''யாரோ ஒரு வாசகர் எழுதி அனுப்பியிருந்த தகவலைத்தான் அப்படி 'கிசுகிசு'வாய் போட்டு இருக்கோம். உண்மையிலேயே எங்களுக்கும் அது யார்ன்னு தெரியாது'ன்னு சொன்னாங்க...''



''என்னோட பதிலும் அதேதான்... அந்த 'ரகசிய சிநேகிதன்' யார்ன்னு எனக்கும் தெரியாது.''

''உண்மையாத்தான் சொல்றீங்களா...?''

''இன்ஸ்பெக்டர்! கடந்த ஒரு வருஷ காலமா பத்திரிக்கையில் என்னைப்பத்தி ஏதேதோ நியூஸ் போடறாங்க. அதெல்லாம் உண்மையாயிடுமா?''

''ஓ.கே...! நான் வர்றேன்...!''

''ஒரு நிமிஷம் இன்ஸ்பெக்டர்...!''

''சொல்லுங்க...''

''கொலையாளி யார்ன்னு தெரிஞ்சுதா...?''

''சீக்கிரமே கண்டுபிடிச்சுடுவோம்...''

நந்தகோபாலன் சொல்லிவிட்டு கீழே இறங்கிவர, அனந்தநாராயணன் எதிர்பட்டார்.

''இன்ஸ்பெக்டர்...! வாசல்ல பத்திரிகை நிருபர்கள் வந்து காத்துகிட்டு இருக்காங்க. நீங்கதான் அவங்களுக்கெல்லாம் போன் பண்ணி இங்கே வரச்சொன்னீங்களாம்... உண்மையா...?''

''எஸ்...''

''எதுக்காக வரச்சொன்னீங்க....''

''வாங்க... நீங்களும் தெரிஞ்சுக்கலாம்...'' சொல்லிக் கொண்டே நந்தகோபாலன் வாசலுக்கு வர – அங்கே காத்திருந்த

பதினைந்துக்கும் மேற்பட்ட பத்திரிகை நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

ஒரு நிருபர் கேட்டார்.

''ஸார்... எனி ஸ்பெஷல் நியூஸ்...?''

''இருக்கப் போய்த்தானே உங்களைக் கூப்பிட்டேன்...? 'ராமன் நாயர் – தங்கம்மா' கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் ஒரு முக்கியமான தகவல் கிடைச்சிருக்கு... கொலையாளி ஒருத்தர் மட்டும் இல்லை. ரெண்டுக்கும் மேற்பட்ட நபர்கள். அதுல ஒருத்தனை ஒரு நபர் பார்த்திருக்கார். கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் அந்த நபர் என்னைச் சந்திச்சார். கொலை நடந்த ஹோட்டலுக்குப் பக்கத்துலதான் அந்த நபர்க்கு வீடு. சம்பவம் நடந்த அன்னிக்கு ராத்திரி அவர் தூக்கம் வராமே மொட்டை மாடியில் உலாவிகிட்டு இருந்தபோது ஹோட்டலில் நடந்த கொலை சம்பவத்தைப் பார்த்திருக்கார். கொலையாளிகளில் ஒருத்தனை தெளிவாவே பார்த்திருக்கார். இந்த விஷயத்தை போலீஸில் சொல்றதா வேண்டாமான்னு ஒரு வாராமா மனசைப் போட்டு குழப்பிகிட்டாராம். இன்னிக்குத்தான் தெளிவடைஞ்சு என்னைப் பார்க்க கமிஷனர் ஆபீஸுக்கு வந்தார்.''

''அவர் யார் ஸார்...?''

''அவரோட உயிர்க்கு ஆபத்து வரும்ங்கிறதால இப்போதைக்கு அவர் யார்ங்கிறதை சொல்ல முடியாது. ஸாரி...''



டென்னீஸ் விளையாட்டைப்பற்றி இப்படி வேடிக்கையாய் சொல்வது உண்டு. பணக்காரர்கள் பொழுது போவதற்காக டென்னீஸ் விளையாட ஆரம்பித்தார்கள். இன்றைக்கு அந்த டென்னீஸே அந்த பணக்காரர்களை மிகப்பெரிய பணக்காரர் களாய் மாற்றி விட்டது.



## 18

**ரா**த்திரி பத்துமணி.

இன்ஸ்பெக்டர் நந்தகோபாலன் தன்னுடைய பைக்கை நுங்கம்பாக்கம் ரோட்டில் இருந்த அந்த 'நளபாகம்' ரெஸ்டாரெண்ட்டுக்கு முன்பாய் நிறுத்தி இறங்கிக் கொண்டார். யூனிஃபார்மை தவிர்த்திருந்தார். வெள்ளை பேண்ட்; வெள்ளை சர்ட்.

ரெஸ்டாரெண்ட்டுக்குள் நுழைந்து காலியாய் இருந்த ஒரு நாற்காலியைத் தேடிப்பிடித்து உட்கார்ந்தார். பக்கத்தில் வந்து நின்ற வெயிட்டரிடம் ''ஒரு லெமன் டீ'' என்று ஆர்டர் கொடுத்துவிட்டு ''டாய்லட் எந்தப் பக்கம்?'' என்று கேட்டார்.

''பின்னாடி இருக்கு ஸார்...''

எழுந்து போனார். வாஷ்பேசினைத் தாண்டியதும் குறுகலாய் ஒரு வழி வந்தது.

'டாய்லட்' என்று பெயின்டில் எழுதி ஒ
அம்புக்குறி போட்டிருந்தார்கள்.

நந்தகோபாலன் சற்றே இருட்டான அந்
குறுகிய வழியில் நடந்ததும் டாய்லட் கத
வந்தது. அதை பொருட்படுத்தாமல் நே
நடந்து ரெஸ்டாரெண்ட்டின் பின்பக்
கதவுக்குப் போய் அதைத் திறந்தார்.

மறுபக்கம் கார்ப்பரேஷன் ட்யூப்லை
வெளிச்சத்தில் ரோடு தெரிந்தது. கதவை
சாத்திவிட்டு ரோட்டில் இறங்கி வேகமா
நடந்தார்.

ஒரு நிமிட நடை.

தெருமுனை வந்தது. தெருமுனையி
இருட்டில் பைக்கோடு காத்திருந்
நீலவண்ணக் கண்ணன் குரல் கொடுத்தான்

''ஸார்...! வாங்க...! நான் இங்கே
யிருக்கேன்.''

நந்தகோபலன் வேகவேகமாய் போய்
பைக்கின் பில்லியனில் ஏறிக்கொள்ள பைக்
சீறிக்கொண்டு புறப்பட்டது.

''என்ன கண்ணன்...! ரொம்ப நேரமா
வெயிட் பண்றீங்களா...?''

''இல்ல ஸார்...! நான் ஏற்கெனவே
உங்ககிட்டே சொன்ன மாதிரி சரியா பத்து
மணிக்கு இங்கே வந்துட்டேன். உங்களை
யாராவது ஃபாலோ பண்ணினாங்களா...?''



''தெரியலை...! இருந்தாலும் எதுக்கு
ரிஸ்க்ன்னு பைக்கை ரெஸ்டாரெண்ட் வாசல்ல
விட்டுட்டு பின்பக்க வழியா வந்துட்டேன்.''

பைக் பறந்தது.

பதினைந்து நிமிஷப் பயணத்துக்குப்
பிறகு அந்த புதிய குடியிருப்பு காலனிக்குள்
பைக் நுழைந்து, ஒரு வீட்டுக்கு முன்பாய்
நின்றது. பைக்கை ஸ்டாண்டிட்டு நிறுத்தி
விட்டு இருவரும் உள்ளே போய்
சாத்தியிருந்த கதவுக்கு முன்பாய் நின்றார்கள்.

நந்தகோபாலன் அழைப்பு மணிக்கு
வேலை கொடுக்க, கதவு ஒரு நிமிஷ
நேரத்துக்குப் பிறகு தயங்கித் தயங்கி
திறந்தது. வீட்டின் உள்ளே டென்னீஸ் கோச்
மேத்யூ இரவு நேர பைஜாமா உடையில்
தெரிந்தார். லேசாய் விஸ்கி நாறியது.

''வணக்கம்... மேத்யூ ஸார்...''

''யா... யாரது...?'' மேத்யூ கேட்டுக்
கொண்டே முகப்பு ட்யூப்லைட்டின்
ஸ்விட்ச்சைத் தட்டினார். வெளிச்சம் பரவியது.

''நான் நந்தகோபாலன். இன்ஸ்பெக்டர்
ஆஃப் போலீஸ். இவர் குந்தவையின் காதலர்
[illegible] ணக் கண்ணன்...''

மேத்யூவின் முகம் சட்டென்று
இருண்டது.

''இந்த...நே...நேரத்துல...எ...எதுக்காக...?''

''உங்களைத் தேடிகிட்டு வந்து இருக்
கோம்ன்னு கேக்கறீங்களா? போலீஸ் –

திருடன் விளையாட்டு விளையாடலாம்ன்னு தான்...''

''எ...என்ன...சொல்றீங்க...?''

''வாங்க...! உள்ளே போய் சொல்றோம்!''

மேத்யூவை இருவரும் தள்ளிக்கொண்டு உள்ளே போனார்கள். அங்கிருந்த சோபாவில் அவரை வலுக்கட்டாயமாய் உட்கார வைத்து பக்கம் பக்கமாய் இருவரும் உட்கார்ந்து கொண்டார்கள்.

நந்தகோபாலன் மெதுவான குரலில் பேச்சை ஆரம்பித்தார்.

''இதோ பாருங்க மிஸ்டர் மேத்யூ...! கடந்த ஒரு வாரகாலமாய் நீங்க ஆடிய கண்ணாமூச்சி விளையாட்டுக்கு இதுதான் க்ளைமேக்ஸ். என்ன அப்படி பார்க்கறீங்க...? இராமன் நாயரையும் தங்கம்மாவையும் கொலை செய்ய நீங்க கூலிப்படையாட்கள் மூனு பேரை அனுப்பினது இப்போ வெட்ட வெளிச்சத்துக்கு வந்தாச்சு...''

மேத்யூ அவர்களிடமிருந்து திமிறினார்.

''என்ன உளர்றீங்க... நா...நான்... எதுக்காக ராமன் நாயரையும் தங்கம்மாவையும் கொலை செய்ய ஆட்களை அனுப்பணும்?''

''இப்படி நீங்க கேள்வி கேட்பீங்கன்னு தெரிஞ்சுதான் இதைக் கொண்டு வந்தோம்...'' சொன்ன நந்தகோபாலன் தன்னிடமிருந்த ஒரு மைக்ரோ டேப்



ரிக்கார்டரை வெளியே எடுத்தார். ''இன்னிக்கு மத்தியானம் சரியாய் 3.47 மணிக்கு நீங்க உங்க 'ஏர்–பெல்' செல்போனிலிருந்து வேற ஒரு செல்போனுக்கு போன் பண்ணி பேசினதை 'ஏர்–பெல்' செல்போன் கம்பெனி அப்படியே ரிக்கார்ட் பண்ணி எங்களுக்கு கொடுத்து இருக்காங்க. போட்டுக் காட்றேன். கேளுங்க.''

சொன்ன நந்தகோபாலன் மைக்ரோ டேப் ரிக்கார்டரின் ஸ்விட்சை ஆன் செய்ய, சில விநாடிகளுக்குப் பிறகு பேச்சுக்குரல் கேட்டது.

முதலில் மேத்யூவின் குரல்.

''நான்தான் மேத்யூ பேசறேன்...''

''சொல்லுங்க ஸார்.''

''இப்படியா... ஒரு காரியத்தை அரையும் குறையுமா பண்ணுவாங்க...?''

''ஏன் ஸார்.. என்னாச்சு...?''

''என்னாச்சா... அந்த இன்ஸ்பெக்டர் நந்தகோபாலன்கிட்டே எவனோ ஒருத்தன் போய் 'கொலையாளிகள்ல ஒருத்தனை நான் பார்த்துட்டேன். அவனை என்னால் அடையாளம் காட்ட முடியும்'ன்னு சொல்லியிருக்கான். அதை அந்த நந்தகோபாலன் பத்திரிகைகாரர்கள் கூட்டத்தில் தெரியப்படுத்தியிருக்கான்...''

''அப்படியா...?''

''என்ன அப்படியா...? இவ்வளவு கவனக்குறைவாகவா வேலை பார்க்கிறது...? உங்க மூனு பேர்ல அவன் எவனைப் பார்த்து இருக்கான்னு தெரியலை. அதனால மூனு பேரும் கொஞ்ச நாளைக்கு வேற ஏதாவது ஸ்டேட் பக்கம் போயிடுங்க... நான் இங்கே நிலவரம் பார்த்துட்டு உனக்கு போன் பண்றேன்... அப்போதைக்கு வந்தா போதும்...''

''சரி... ஸார்... நாங்க வேணும்ன்னா மூனு பேரும் 'கெட் அப்'பை மாத்திகிட்டு ஆந்திரா பக்கம் போயிடறோம்.''

''எங்கேயாவது போய்த் தொலைங்க!''

மைக்ரோ டேப் ரிக்கார்டரில் பேச்சு நின்றது. அதை அணைத்துவிட்டு நந்த கோபாலன் கேட்டார்.

''இப்ப... என்ன சொல்றீங்க... மேத்யூ...? உங்க பேச்சை நாங்க ரிக்கார்ட் பண்ணலை. 'ஏர் பெல்' செல்போன் கம்பெனிகாரங்க ரிக்கார்ட் பண்ணிக் கொடுத்தது.''

மேத்யூ சொத சொதவென்று வியர்த்துப் போயிருந்தார். பொறியில் மாட்டிக் கொண்ட எலியாய் கண்கள் பரபரத்தது. நீலவண்ணக் கண்ணன் ஒரு புன்னகையோடு அவருடைய தோளின் மேல் கையை வைத்தான்.

''மேத்யூ...! இராமன் நாயரும் தங்கம்மாவும் கொலை செய்யப்பட்டு அந்த



விவகாரத்தில் குந்தவையோட அப்பாவும, அம்மாவும் சிக்கிக் கொண்டதும் எனக்கு மாதல்ல உங்க மேல்தான் சந்தேகம் வந்தது. ந்தேகம் வந்ததுக்கு காரணம்: போனவாரம் டையார் டென்னீஸ் கோர்ட்டில் நானும் ந்தவையும் பேசிகிட்டு இருந்தபோது நீங்க ங்க கார்ல வந்தீங்க. நான் உங்க ார்வையில் பட்டுடக்கூடாதுங்கிறதுக்காக மல்ல நகர்ந்து ஒர மரத்துக்குப் பின்னாடி பாய் நின்னுகிட்டேன். நீங்க குந்தவை ட்டே கொஞ்ச நேரம் பேசினீங்க. துக்கப்புறம் குந்வை ஷார்ட்ஸ் சேஞ்ச் ண்றதுக்காக ட்ரஸ்ஸிங் அறைக்குப் பானதும் உங்களுக்கு ஒரு செல்போன் ழைப்பு வந்தது. போன்ல நீங்க கோபமா ார்கிட்டேயோ ''நான் கோச்சிங் தர்றது வளுக்குப் பிடிக்கலையாம். அந்த பர்ட்ஸன்தான் உசத்தியாம். அதுக்காக ளைக்கு சிங்கப்பூர் போறாளாம். என்ன ரு திமிர்! ஏறி வந்த ஏணியை எட்டி தைச்சுட்டு போறா...! போகட்டும்! அவ னிமே டென்னீஸ் விளையாட முடியாதபடி ரச்னைகளை உண்டாக்கப் போறேன். வளும் அவளோட அப்பாவும் அம்மாவும் ம்மதியில்லாமே தவிக்கணும். அதைப் ர்த்து நான் சந்தோஷப்படணும்''ன்னு சினதை நான் கேட்டேன். அந்த சமயத்துல து எனக்கு ஒரு பெரிய விஷயமா படலை. தோ பொறாமையால புலம்பறார்ன்னு

நினைச்சுட்டேன். இதைப்பத்தி குந்தவை
கிட்டே பின்னாடி சொல்லிக்கலாம்னு
இருந்துட்டேன்... ஆனா போன வாரம் நடந்த
கொலை விவகாரத்தில் குந்தவையோட
அப்பாவும் அம்மாவும் மாட்டிகிட்டதும் எனக்கு
முதல்ல உங்கமேல்தான் சந்தேகம் வந்தது
அதை வெளியே யார்கிட்டேயும் சொல்லாமே
இன்ஸ்பெக்டர் நந்தகோபாலனை அவர் வீட்ல
தனியா சந்திச்சு விஷயத்தை சொன்னேன்.
நானும் அவரும் உங்களை 'ட்ராப்' பண்ண
திட்டம் போட்டோம். ஒன்றுக்கு மேற்பட்ட
நபர்கள்தான் அந்த ரெட்டைக் கொலையைப்
பண்ணியிருக்கணும்னு போஸ்ட் மார்ட்டம்
ரிப்போர்ட் சொன்னதை வெச்சுகிட்டு
கொலையாளிகளில் ஒருத்தனை பார்த்
துட்டதாக ஒரு நபரைவிட்டு சொல்லச்
சொன்னோம். அதையே பத்திரிகை நிருபர்கள்
கூட்டத்திலேயும் இன்ஸ்பெக்டர் சொன்னார்
இந்த விஷயம் எப்படியும் உங்களுக்குத்
தெரிய வரும். அப்படி தெரிய வரும்போது
கண்டிப்பாய் நீங்க கூலிப்படை ஆட்களோடு
தொடர்பு கொண்டு பேசுவீங்கன்னும்
எதிர்பார்த்தோம். அப்படி பேசினால் அதை
மானிட்டர் பண்ணி அந்த உரையாடலை
மைக்ரோ டேப் ரிக்கார்டரில் பதிவு பண்ண
சொல்லி 'ஏர்பெல்' செல்போன் கம்பெனிக்கு
இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்தோம். நாங்க
எதிர்பார்த்தபடியே எல்லாம் நடந்தது.''



மேத்யூ இருட்டடித்த முகத்தோடு தலை குனிந்து உட்கார்ந்திருக்க – நந்தகோபாலன் கேட்டார்.

''இராமன் நாயர்க்கும் குந்தவையோட அப்பா அம்மாவுக்கும் பிரச்னை இருக்குன்னு உங்களுக்கு எப்படி தெரியும்?''

மேத்யூ பெருமூச்சோடு நிமிர்ந்தார்.

''அடையார் டென்னீஸ் கோர்ட்டில் குந்தவையைப் பார்க்கிறதுக்காக இராமன் நாயர் வந்து வரவேற்பறையில் காத்திருந்தார். குந்தவை அவர்கிட்டே கோபமாய் பேசினாள். அதே நேரத்துல அனந்தநாராயணனும் செல்போனில் கோபமாய் பேச, நான் இவங்களுக்குள்ளே ஏதோ பிரச்னை இருக்குங்கிற முடிவுக்கு வந்து இராமன் நாயரை ஃபாலோ பண்ணினேன். ரெண்டு நாள் அவங்களை ஃபாலோ பண்ணினதில் எனக்கு எல்லா விபரங்களும் தெரிஞ்சுது. குந்தவையோட ஃபேமலியை கொலைப் பழியில் மாட்டிவிடணும்ங்கிறதுக்காக கூலிப்படை ஆட்களை வெச்சு இராமன் நாயரையும் தங்கம்மாவையும் தீர்த்துக் கட்டினேன்.''

''மிஸ்டர் மேத்யூ...! நீங்க படிச்சவர். அனுபவம் மிக்கவர். குந்தவை வேற ஒரு கோச் கிட்டே பயிற்சி எடுத்துக்கிட்டதை உங்களால ஏன் ஜீர்ணிக்க முடியலை...?''

மேத்யூ விரக்தியாய் சிரித்தார். கண்களை மூடி தலையசைத்தபடி சொன்னார்.

"ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு வீக்னஸ் உண்டு. என்னோட வீக்னஸ் பொறாமை...!"



## 19

**ம**றுநாள் காலை பத்துமணி.

ஹால் சோபாவில் அனந்தநாராயணனும் புனிதாவும் சிரிப்பு முகங்களோடு உட்கார்ந்திருக்க –

மாடியிலிருந்து குந்தவை வேகமாய் இறங்கி வந்தாள்.

"அப்பா...!

"என்னம்மா...?"

"அவர் வந்துட்டிருக்கார்..."

"அவரா...? யாரம்மா...!"

"கொஞ்சம் திரும்பித்தான் பாருங்களேன்."

அனந்தநாராயணன் திரும்பிப் பார்த்தார். மலர்ந்தார். நீலவண்ணக் கண்ணன் தயக்கமாய் போர்டிகோ படியேறி வந்து கொண்டிருந்தான்.

"அட! நம்ம மாப்பிள்ளை...!"

**(முற்றும்)**



# சாபம்

வாயுமைந்தா உன்னிடம்
எதையுமே வேண்டாத
நான் - இப்போதும்
எப்போதும் உன்னை
வேண்டிக் கேட்கிறேன்
என் மேல் கருணை காட்டு
அல்லது... உனக்கே!!
என்னை பிடிக்கலையா?
வரங்களைத் தா - சிறிதும்
விருப்பம் இல்லையா?
சரி... சாபத்தையாவது!
கொடுத்து விடு...
அழிந்தாவது போகிறேன்
அவள் பிரிவை பார்க்கும்
முன் - என்னை
எரிதனல் விறகிலிட்டுவிடு...??



ராஜா செல்வராஜ்,
BSNL, காரைக்குடி